Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி–21 | 03–06–2004 | வியாழக்கிழமை | ஓசை –106




# கிளி.யாழ்.இல் மக்கள்,போராளிகள் திரண்டு

# ஊடகவியலாளர் நடேசனுக்கு அஞ்சலி

## - வடக்கு கிழக்கில் பூரண துக்கதினம்

(கிளிநொச்சி)

**ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசன் அவர்களுக்கு வன்னி, யாழ்.மாவட்ட மக்கள் தமது அஞ்சலியை உணர்வுபூர்வமாகச் செலுத்தினர். நேற்றுக்காலை வன்னியில் கிளிநொச்சியிலும், பின்னர் யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள், போராளிகள் கலந்துகொண்டு நடேசனுக்கு அஞ்சலி செலுத்தினர். அத்துடன் வடக்கு கிழக்குப்பகுதி எங்கும் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.**

காலை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றதைத் தொடர்ந்து அவரது வித்துடல் ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடிவரை பாண்ட்வாத்திய அணிவகுப்புடன் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பின் அங்கிருந்து பரந்தன்,ஆனையிறவு, பளையூடாக முகமாலை தடைமுகாமிற்கூடாக யாழ்.குடாநாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதேவேளை தமிழர் தாயகப் பகுதிகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)



அரசியல்துறைப்பொறுப்பாளர் அவர்கள் நாட்டுப்பற்றாளர் நடேசன் அவர்களின் வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்துஅஞ்சலி செலுத்துகிறார்.

# நடேசனின் இறுதிக்கிரியைகள் இன்று நெல்லியடியில் நடைபெறும்

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் நாட்டுப் பற்றாளருமான ஜி.நடேசனின் இறுதிச்சடங்குகள் வடமராட்சி நெல்லியடியில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 9மணியளவில் கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ள சம்பிரதாயபூர்வசடங்குகளைத் தொடர்ந்து நெல்லியடி மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்குஅஞ்சலிக் கூட்டங்களும் இடம் பெறும்.

பின்னர் நண்பகல் நெல்லியடி வீதியில் உள்ள ஆலங்கட்டு இந்து மயானத்தில் அவரது உடல் தகனம் செய்யப்படும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## –நடேசனின் வித்துடல் தாங்கிய ஊர்தியின்–

# பாதையில் இடையூறு செய்ய முயன்ற சிப்பாய் மீது இளைஞன் தாக்குதல்

(வடமராட்சி)

ஊடகவியலாளர் நடேசனின் வித்துடலைத்தாங்கிய ஊர்தி வரும் பாதையில் இடையூறு ஏற்படுத்த முற்பட்ட படைச்சிப்பாய் ஒருவர் இளைஞன் ஒருவரால் தாக்கப்பட்டார். இதனால் அச்சமுற்ற படைச்சிப்பாய் தப்பியோடி உயரதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் பூதவுடல் தாங்கிய ஊர்தி பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள நேற்றுப் பிற்பகல் முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியூடாக யாழ். எடுத்துவரப்பட்டிருந்தது.

அவ்வேளையில் கொழும்பு செல்ல வருகைதந்திருந்த லொறிகளை அப்பேரணியூடு செல்ல குறித்த படைச்சிப்பாய் நிர்ப்பந்தித்துள்ளார். இதைத் தடுத்த இளைஞரை குறித்தசிப்பாய் எச்சரிக்க முற்பட்டதையடுத்தே குறித்த இளைஞன் சிப்பாயைத் தாக்கியதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பாக இராணுவப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். (27)



நாட்டுப்பற்றாளர் நடேசன் அவர்களின் வித்துடலை பெறுப்பேற்க முகமாலையில் தாயாராகிநிற்கும் மக்கள் போராளிகள் பா.உ.கள்.

# அண்மையில் இடம்பெற்ற படுகொலையில் சிறிலங்காப் படையினருக்குத் தொடர்பு

## -படையதிகாரியுடனான சந்திப்பில் கேணல் ரமேஸ் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்எகாலமாக இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்களில் சிறிலங்கா படையினர் சம்பந்தப்பட்டிருப்பதை மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் சுட்டிக் காட்டியுள்ளார். நேற்று படை அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்

நேற்று மட்டு. அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் மற்றும் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி சாந்த கொட்டேகொடவிற்கும் இடையிலான சந்திப்பொன்று வவுணதீவு சூனியப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைச்கட்டுப்படுத்திஅங்குஇயல்பு நிலையைக் கொண்டுவருவது தொடர்பாகவும் அதற்கு எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்கள் படையினர் சம்பந்தப்பட்டிருப் பதையும் படையினர் கருணா குழுவினருடன் நெருங்கிச் செயற்பட்டு வருகின்றனர் என்பதையும் கேணல் ரமேஸ் சுட்டிக்காட்டினர்.

தான் புதிதாகப் பதவியேற்றுள்ள நிலையில் இனிவரும் நாட்களில் அசம்பாவிதங்கள் எதுவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புதிய கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாக கடற்படைத்தளபதி தயாசந்தகிரி நியமனமாவார்

(கொழும்பு)

புதிய கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமை அதிகாரியாக கடற்படைத் தளபதி தயாசந்தகிரி நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது இராணுவத் தளபதியாகவும், கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாகவும் பதவி வகிக்கும் லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல ஓய்வு பெறவுள்ளதையடுத்து கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாக இவர் நியமிக்கப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை இராணுவத் தளபதியாக மேஜர்ஜெனரல் சாந்த கொட்டேகொட, மேஜர் ஜெனரல் சூல செனவிரட்ன, மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவை ஆகியோரின் பெயர்கள் பேசப்படுகின்ற போதும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வவு.தாரிக்குளம் பகுதியில் சிறுமி ஒருவர் படுகொலை

(செட்டிகுளம்)

வவுனியா தாரிக்குளம் பகுதியில் வாய்பேசமுடியாத சிறுமி ஒருவர் நேற்று கொலைசெய்யப்பட்டுள்ளார்.கிருபாகரன் ஜனிஸ்சா (வயது15) என்ற மேற்படி சிறுமி நேற்று மாலை 2 மணியளவில் வீட்டிலிருந்து ஆடுமேய்க்கவெனப் புறப்பட்டுச் சென்றுள்ளார். பின்னர் சிறுமி இறந்து கிடப்பதாக நான்கு மணியளவில்அவரது குடும்பத்திற்குத்தகவல் கிடைத்துள்ளது.இவர் பாலியல் வல்லுறவின் பின் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என வவுனியாப் பொலிசார்தெரிவித்துள்ளனர். (21)

## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

யாழ்.சாலை கிளிநொச்சி (தமிழீழ வைப்பகம் அருகாமை) என்னும் முகவரியில் இயங்கி வந்த கோமான் தையலகம் 01.06.2004 ஆம் திகதியுடன் வைத்தியசாலை முன்பாக யாழ்சாலை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை வாடிக் கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். சி.4551


## பனைவெல்ல ஆலை திறக்க ஏற்பாடு

புதுக்குடியிருப்பு மந்துவிலில் அமைந்துள்ள பனை தென்னை வள உற்பத்திச் சங்கத்தின் பனை வெல்ல ஆலை திறப்பு விழா எதிர்வரும் 05 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 11.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. ஏற்கனவே இரு பனை வெல்ல உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது இங்கு குறிப்பிடத் தக்கது. (20)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்க கடனுதவி

நிக்கொட் நிறுவனத்தினால் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக வடமராட்சி கிழக்கில் உள்ள 14 கடற்றொழிலாளர் சங்கங்களில் 11 சங்கங்களிற்கு 20 இலட்சம் ரூபாவீதமும், 03 சங்கத்திற்கு 15 இலட்சம் ரூபா வீதமும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி மூலம் ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கமும் தமது பயனாளிகளுக்கு கண்ணாடி நூல் இழைப் படகிற்கு 80 ஆயிரம் ரூபாவையும், வெளியிணைப்பு இயந்திரத்திற்கு ஒருஇலட்சம் ரூபாவையும், கட்டு மரத்திற்கு 12 ஆயிரம் ரூபாவையும் மீன்பிடி வலைக்கு 25 ஆயிரம்ரூபாவையும், சுழற்சி முறைக்கடனாகவழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் நிக்கொட் நிறுவனம் தற்பாது முதற்கட்டமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் 10 இலட்சம் ரூபாவினை வழங்கியுள்ளது. இதன் நிதிமூலம் சங்கங்களினால் யமகா வெளியிணைப்பு இயந்திரங்களும் மீன்பிடி வலைகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் மட்டும் 2 கண்ணாடி நூல் இழைப்பட குகளை பயனாளிகளுக்கு வழங்கி யுள்ளது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் காலை 11.00 மணியள வில்வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் ந.பவானந்தராசா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிக்கொட் திட்டப்பணிப்பாளர் நவரட்ணராஜா, கடற்றொழில் நீரியல்வளத்துறைஉதவிப்பணிப்பாளர் தர்மலிங்கம், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் புகழேந்தி, வடமராட்சிகிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கப்பரிசோதகர், வடமராட்சி கிழக்குமருதங்கேணிகாவல் பணிமனைப் பொறுப்பாளர், புனரமைப்புக் குழுதலைவர் கடற் றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் யமகா கம்பனியின் முகாமையாளர்கள் பயனாளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 65 வெளியிணைப்பு இயந்திரங்களும் (யமகா) ஒரு தொகுதி மீன்பிடி வலைகளும் கையளிக்கப்பட்டுள்ளன. (11)

## 1996 டிசம்பரிற்கு முன் ஓய்வு பெற்றோர் கவனத்திற்கு

ஓய்வூதிய சுற்றறிக்கை இல.06/ 2004(1) கல்விக்கு அமைவாக 1996.12.31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களை அவர்களுக்குரிய 1996.12.31 ஆந் திகதியில் நடைமுறையிலிருந்த சம்பளப்படிநிலையில் வைத்து ஓய்வூதியத்தை மீளக்கணிப்பதற்கு அவர்களது சேவைக்காலம், மற்றும் தொழில்சார் தகைமைகள் நடைமுறைப்பட்ட திகதிகள் முக்கியமாகையால் அவ்ஆசிரியர்களின் அடிப்படைத்தரவுகளைத் திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுகின்ற 1996.12.31 இற்கு முன்னர் ஓய்வு பெற்ற அனைத்து ஆசிரியர்களும் உரிய படிவத்தை தத்தமது பிரிவு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் அல்லதுகச் சேரிக்கணக் குக்கிளையில் பெற்றுப் பூரணப்படுத்தி பிரதம கணக்காளர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு பதிவு தபாலிலோ அல்லது நேரிலோ சேர்ப்பிக்குமாறு முல்லைத்திதீவு கச்சேரிரபி தமரகணக்காளர் கோரு கின்றார் இளைப் பாறும் போது அதிபர் சேவையில் இருந்தவர்கள் மேற்குறித்த படிவம் நிரப்பி அனுப்பவேண்டிய அவசியமில்லை எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது.(20)

## விசுவமடு தேராவில் பகுதியில் குடிசையொன்று தீக்கிரை

விசுவமடு தேராவில் மில்லர் குடியிருப்பில் கடந்த திங்கள் மதியமளவில் குடியிருப்பு ஒன்று தீக்கிரையானது. இராணுவ நடவடிக் கை காரணமாக யாழ்ப் பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் வசித்து வந்த தேவதாஸ்பத்தி நாயகி என்பவரது குடியிருப்பு தீக்கிரையானது. இது மரம், தடிகளால் இரட்டை தட்டாக அமைக்கப்பட்டு கிடுகால் வேயப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட இந்தக்குடும்பத்திற்கு உதவி வழங்குவதில் உடையார் கட்டு தெற்கு தே.எ. பேரவையினரும் பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தினரும் ஈடுபட்டிப்பதை காணக் கூடியதாக இருந்தது. (19)

## மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் சிரமதானம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் சிரமதானப் பணி இடம்பெற்றுள்ளது. காலை 10.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வளாகத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் மருதங் கேணி இந்துத்தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்து சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்துள்ளனர். (11)

### யாழ். பல்கலைக்கழக முல்லை. மாவட்ட மாணவர்களின் கல்விவளர்ச்சி நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின் முடிவுகள்.

முதலாம் பரிசு அதிர்ஷ்ட எண்- 670 க. மேனகா 1ஆம் வட்டாரம் முள்ளியவளை. இரண்டாம் பரிசு அதிர்ஷ்ட எண்-1291 செ. சுவேந்திரன். 2ஆம யுனிற் பாலிநகர் மூன்றாம் பரிசு அதிர்ஷ்ட எண் 162 கௌசிகா.

ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 01)அதிர்ஷ்ட எண் - 5001 - | அ.சிவலிங்கம், வற்றாப்பளை, முள்ளியவளை |
| 02)அதிர்ஷ்ட எண் - 9945 - | N. குமரன் செம்மலை, அளம்பில். |
| 03)அதிர்ஷ்ட எண் - 15297 - | காண்டீ தர்மபுரம். |
| 04)அதிர்ஷ்ட எண் - 15809 - | வி.விநோகன், 2ஆம வட்டாரம், முள்ளியவளை. |
| 05)அதிர்ஷ்ட எண் - 16508 - | கவியன், வளர்மதிநமைாடம், புதுக்குடியிருப்பு. |
| 06)அதிர்ஷ்ட எண் - 4217 - | க.சகானா, 10ஆம்வட்டாரம்,முள்ளியவளை. |
| 07)அதிர்ஷ்ட எண் - 561 - | த.விதுஷிகா, கேப்பாபிலவு,முள்ளியவளை. |
| 08)அதிர்ஷ்ட எண் - 15094 - | பு.புஸ்பன், கனகபுரம்,கிளிநொச்சி. |
| 09)அதிர்ஷ்ட எண் - 273 - | ஏ.சுபாஜினி, 7ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு. |
| 10)அதிர்ஷ்ட எண் -6178 . | K.சுதாகரன், தண்ணீருற்று, முள்ளியவளை. |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
ந.யோகரட்ணம் (GSO)
வைத்தியசாலை வீதி, 4 ஆம் வட்டாரம், முள்ளியவளை

(சி: 9816)


## அழகியல் கலாமன்றம் ~ கிளிநொச்சி



இளையோருக்கான புதிய நுண்கலை வகுப்புகள்
19.06.2004 தொடக்கம் ஆரம்பம்



- வாய்ப்பாட்டு
- பரதம்
- கதகளி
- மிருதங்கம்
- வயலின்
- நாடகம்
- நடனம்
- பண்ணிசை
- வீணை
- சித்திரம்
- ஓகன்

வாரத்தில் இருநாட்கள் -- வடஇலங்கை சங்கீத சபையின் தரம் 01, தரம் 02 பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும்.

உடன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

(4564) அதிபர்


## சாவு அறிவித்தல்

### திருமதி. பாலசுப்பிரமணியம் அன்னையோதி (ஜானகி)

இலக்கம் 17/5 சென் ஆன்ஸ்லேன், கண்டிக்குழி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. பாலசுப்பிரமணியம் அன்னையோதி (ஜானகி) அவர்கள் 2004.06.02 அன்று சாவடைந்துள்ளார். அன்னார் நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் (பிரதம பயிற்சி ஆசிரியர்தமிழீழகாவல்துறை.) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான திரு. திருமதி. நாகலிங்கம், சின்னாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும், நடராஜா, இராஜலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கவிதா (பிரான்ஸ்), சித்திரா (ஜேர்மனி), காலம் சென்ற அசோகா, வனிதா (பிரான்ஸ்), பிரசாந்த் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜா (பிரான்ஸ்), காலம் சென்ற வரதராஜா, ஜெகன் (பிரான்ஸ்), தர்ஜினி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கபீல் (பிரான்ஸ்), அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2004.06.03 அன்று மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: கணவர், பிள்ளைகள்

(சி: 4398)

## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு கச்சேரி வாளகத்திலுள்ள புனர்வாழ்வு புனர்அமைப்புக்கிளைக் கட்டடம் திருத்தத்திற்கான கேள்வி கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றது.கேள்வி கோரும் ஒப்பந்தகாரர் குறைந்தது ICTAD தரம் எம் 07 இல் பதிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். மீளளிக்கப்படாத வைப்புபணமாக ரூபா:750/= உம், மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா: 27,000/= உம்செலுத்திக் கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவுக்கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 15.06.2004 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளலாம்.

02. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 12.07.2004 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அரசாங்க அதிபர், முல்லைத்தீவு என்ற விலாசத்துக்கு, பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியிலோ நேரடியாகவோ இடலாம். கேள்விப்பத்திர வலதுபக்க மேல் மூலையில் கேள்விக்கான வேலையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.

03. கேள்விகள் 12.07.2004 ஆம் திகதி அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோரியோரோ அல்லது கேள்வி கோரியவரின் எழுத்து மூலமான பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

(திருமதி. இமெல்டா சுகுமார்)
மாவட்ட கேள்விச்சபைத்தலைவரும்
அரசாங்க அதிபரும்,
முல்லைத்தீவு, மாவட்டம்.

(சி: 9122)

## - பிராந்திய அமைதி, ஸ்திரத்தன்மைக்கு -

# இந்தியா–சீனா–பாகிஸ்தானுக்கிடையில் பொதுவான அணுவாயுதக் கொள்கை தேவை

### – இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் யோசனை

(புதுடில்லி)

**பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றுக்கிடையில் பொதுவான அணுவாயுதக் கொள்கைதேவை. இவ்வாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வந்சிங் நேற்றுமுன்தினம் யோசனை கூறியுள்ளார்.**

அணுவாயுத விபத்தில் பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் வகையில் இந்தியா, பாகிஸ்தான் நிபுணர்கள் நிலையிலான பேச்சு வார்த்தை இம்மாதம் 19,20ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடை பெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

எல்லாப்பிரச்சினை குறித்து சீனாவுடன் நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெயந்த் தீட்சித் புதிய பிரதிநிதியாக கலந்து கொள்வார் என்று கூறிய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்தப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் கூறியுள்ளார்.

இம்மாதம் 21,22ஆம் திகதிகளில் தாம் சீனா செல்லவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## 16பேரைக் காணவில்லை

(புதுடில்லி)

பீகாரில் நதியில் பயணித்துக் கொண்டிருந்த படகு கவிழ்ந்ததில் 16 பேர் காணாமல் போயுள்ளனர். பீகாரில் சராண் மாவட்டத்தில் ஆலங்கட்டி மழை தொடர்ச்சியாகப் பெய்தமையினால் நேற்றுமுன் தினம் நதியில் பயணிகளை ஏற்றிச்சென்ற படகொன்று கவிழ்ந்துள்ளது. இதுவரை 23 சடலங்களை பொலிசார் மீட்டுள்ளனர். ஏனையவர்களை மீட்கும் பணி தொடர்வதாக பொலிசார் கூறியுள்ளனர்.




சீனாவுக்கு ஐரோப்பிய சமூகத்தின் ஆயுதங்கள் விற்பனைசெய்யத்தடை விதித்து 15 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் சீனாவில் அணிவகுத்து நிற்கும் கவசவாகனங்கள்.

## - யூன்-30 இற்குப்பின் ஈராக்கில் -

# கூட்டுப்படைகளின் நிலைகுறித்து பா.சபையிடம் அமெ.பிரிட்டன் திருத்தப்பிரேரணை சமர்ப்பிப்பு

ஈராக்கிய நிர்வாகம் இம்மாதம் 30ஆம் திகதி ஈராக்கிய மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. வெளிநாட்டு இராணுவம் ஈராக்கிலிருந்து வெளியேறுவது சம்பந்தமாக திருத்தப் பிரேரணையொன்றை அமெரிக்காவும் பிரிட்டனும் பாதுகாப்புச் சபையிடம் சமர்ப்பித்துள்ளன.

வெளிநாட்டு இராணுவத்தின் நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக இம்மாத இறுதியில் முடிவிற்கு வந்ததும் அவற்றின் எதிர்கால நடவடிக்கை என்ன என்று சீனா, பிரான்ஸ்,ரஷ்யா,ஜேர்மனி ஆகிய நாடுகள் கேள்வியெழுப்புவதற்கு பதில் அளிக்கும் வகையிலேயே இந்தத்திருத்தப் பிரேரணையை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பாதுகாப்புச் சபை அங்கத்தவர்கள் கருத்து வெளியிடுகையில், இந்தத் திருத்தப் பிரேரணை தொடர்பான விவாதத்திற்கோ அல்லது வாக்கெடுப்பிற்கோ திகதி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றும், இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் மற்றும் நேற்று நியூயோர்க் சென்ற ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரின் விளக்கங்களுக்கு தாம் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தப் பிரேரணையின் பிரதிகள் அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. ஈராக்கிய நிர்வாகத்தை அந்நாட்டு மக்களிடம் ஒப்படைக்கும் அரசியல் நடைமுறைகள் முடிவுக்கு வந்ததும் வெளி நாட்டு இராணுவம் வெளியேறும் என்று அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதில் திகதி எதுவும் குறிப்பிடப்படாத போதிலும் 2005ஆம் ஆண்டு இறுதி அளவிலே இது இடம் பெறலாம் என பாதுகாப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை எதிர்வரும் சனவரி மாதம் பதவிக்கு வரவிருக்கும் இடைக்கால அரசாங்கம் வெளிநாட்டு இராணுவத்தை ஈராக்கில் இருந்து வெளியேறக்கோரி வற்புறுத்தக்கூடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.



சியோலுக்கு அண்மையில் பன்முஞ்சம் கிராமத்தில் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க, தென்கொரியப் படைவீரர்கள்.

# ஷேர்பகதூர் மீண்டும் பிரதமர், நேபாள மன்னரால் தெரிவு

(காத்மண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திரா புதிய பிரதமரை நியமித்துள்ளார்.ஷேர்பகதூரையே மீண்டும் மன்னர் நேற்று பிரதமராகத்தேர்வு செய்துள்ளார்.

2002ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றார் ஷேர்பகதூர். ஆனால் ஷேர்பகதூரை பதவி விலக்கிய ஞானேந்திரா புதிய பிரதமர் தெரிவுசெய்யப்படுவார் என்று முன்பு அறிவித்திருந்தார். ஆனால் மீண்டும் ஷேர்பகதூரையே நேற்று பிரதமராக தேர்வு செய்து அறிவித்துள்ளார்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட ஐந்து எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப பல கட்சி சனனாயக அரசு பொறுப்பேற்க வேண்டுமென்ப தற்காக பிரதமர் சூரியபகுதூர்தாப்பா தாமாகவே பதவி விலகியதையடுத்து ஷேர்பகதூரை ஞானேந்திரா 2002இல் பிரதமராக தேர்வு செய்தார். இவரிடம் அனைத் துக் கட்சியுடனும் அரசமைத்து தேர்தல் நடத்த வேண்மென்று மன் னர் ஞானேந்திரா 2002இல் கேட்டுக்கொண்டார்.

இவர் தேர்தல் நடத்தத் தவறிய தாக குற்றம் சாட்டப்பட்டே மன்னரால் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பிலிப்பைன்சில் அரேபிய தூதரகத்தின் முன்னால் காவலில் நிற்கும் பிலிப்பைன்ஸ் பொலிஸ்வீரர்.

# காவலர்–கைதிகள் மோதல் பிரேசில் சிறையில் 50 பேர் பலி

### - நூற்றுக்கு மேற்பட்டோர் காயம்

பிரேசில் நாட்டில் மூன்று நாட்களாக நடைபெற்ற சிறைக் கலவரத்தில் 50 பேர் கொல்லப்பட்டு நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். இந்தச் சிறைக் கலவரம் நேற்று முன்தினம் அடக்கப்பட்டுள்ளனர் என்றும் பிறேசில் அரசுகூறியுள்ளது.

தென்னமெரிக்க நாடான பிரேசிலில் இரண்டாவது பெரிய நகரம் றியோடி யெனிரோ ஆகும். இங்குள்ள சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை 14 பேர் தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து சிறைக் காவலர்களுக்கும் கைதிகளுக்குமிடையே கடும் சண்டை ஏற்பட்டுள்ளது. இருபகுதியினரும் ஆயுதங்களைப் பயன்படுத்தி கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர் இதனையடுத்து கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்த இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் தான் முடிவுக்கு வந்துள்ளது என்று பிரேசில் அரசு கூறியுள்ளது.

இதேவேளை இந்தச் சிறையில் 900 பேரை மட்டுமே அடைப்பதற்கு இடவசதி போதுமானது, ஆனால் பிரேசில் அரசு 1200 பேரை அடைத்து வைத்திருந்தது.

இதனால்தான் தாக்குதல் நடவடிக்கையில் 50பேர் இறந்துள்ளனர். 100ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று கண்டனங்கள் எழுந்துள்ளன.

# ஈராக்கில் சுதந்திரமான அரசு உருவாகும் வேளை நெருங்கி விட்டது

### -அமெ. சனாதிபதி புஷ் தெரிவிப்பு

ஈராக்கில் சுதந்திரமான இறையாண்மை பெற்ற சனநாயக அரசு ஏற்படும் வேளை நெருங்கிவிட்டது அதற்கான நாட்கள் வெகுதூரமில்லை என்று வெள்ளை மாளிகை செய்தியாளர் கூட்டத்தில் புஷ் நேற்றுமுன் தினம் கூறியுள்ளார்.

இதனையடுத்து அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கிற்காக எதிர்காலத்திற்கான திருத்தப்பட்ட திட்டமொன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ளன.

அமெரிக்க கூட்டுப்படையினர் ஈராக்கை விட்டுவெளியேறுவதற்கான காலக்கெடு இந்தப் புதிய தீர்மானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.



அண்மையில் அரேபிய தீவிர வாதிகள் நடத்திய பணயக்கைதிகளின் நாடகத்தையடுத்து அங்குள்ள சோதனைச் சாவடி ஒன்றில் காவலில் நிற்கும் சவுதி இராணுவம்

# கிழக்குப் பகுதிவன்முறைகள் பெரியதொரு பிரச்சினைதான்

## கண்காணிப்புக்குழு துணைத்தலைவர்

**“கிழக்குப் பகுதி வன்முறைகள் பெரிய தொருபிரச்சினைதான் அதை நான் மறுக்கவில்லை அதற்காக நிலைமை கட்டுக்கடங் காமல் போகிறது எனக்கூறமுடியாது” எனப் போர்நிறுத் தக்கண்காணிப்புக்குழுவின் துணைத்தலைவர் ஹெறாக்லண்ட் தெரிவித்தார்.**

பி.பி.சி.க்குஅவர் நேற்று முன்தினம் வழங்கிய பேட்டியி லேயே இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்புப் பத்திரிகையாளர் நடேசனின் படுகொலைக்குப் பின் னர் விடுதலைப்புலிகள் வெளியிட்ட அறிக்கையில் கிழக்குப்பகுதி வன் முறைச்சம்பவங்களுக்கு சிறிலங் காப் படையினரே பொறுப்பென்று அரச படைகள் மீது குற்றம் சுமத் தியுள்ளனர். இதுகுறித்து உங்க ளுடைய கருத்து என்ன என்று இலங்கை சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத் தலைவர் ஹொக்லண்ட் அவர்க ளிடம் கேட்டபோது;

விடுதலைப்புலிகள் தமிழ் நெற் இணையத்தளமூடாக இது தொடர் பாக வெளியிட்ட அறிக்கையைப் பார்க்குமிடத்து அப்படித்தான் தெரிகிறது.

ஆனால் எங்களுக்கு அது தொடர்பாக அவர்களிடம் இருந்து அதிகாரபூர்வ புகார் எதுவும் வர வில்லை.

எது எப்படியோ நடை பெற்றசம் பவம் குறித்து விசாரித்து வருகின் றோம் என்றார்.

—இது போன்ற சம்பவங்கள் மற்ற சமாதான வழிமுறைகளையும் அச்சுறுத்துமா எனக்கேட்ட போது;

கிழக்குப்பகுதி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையே வவுனி தீவில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறவிருக்கின்றன. அந்தச் சந்திப் பிற்குப் பிறகு மேலும் கருத்துக் கூற இயலும் என்று ஹொக்லண்ட் தெரிவித்தார்.

கிழக்குப்பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வரும் நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அந்தப் பகுதியில் இருக்கிறார்களா? அவர் கள் அங்கு என்ன செய்கிறார்கள்? எனக் ஹெறாக்லண்ட்டிடம் கேட்ட போது;

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறைப்பகுதிகளில் இருபது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வினர் இருக்கிறார்கள்.

நடைபெறும், வன்முறைச் சம்பவங்கள் குறித்துஅவர்கள் விசாரித்து வருகின்றார்கள். இருந்தாலும் புலனாய்வு சக்தி, தகுதி எங்களிடம் இல்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் புலிகளும், அரசுதரப்பு மறுபகுதியிலும் புல னாய்வு செய்யவேண்டும்.

இந்த இருதரப்பினரிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி வன் முறைச்சம்பவங்களுக்குப் பொறுப் பானவர்களை தடுத்துவைக்க முயற்சிகளையும் மேற்கொண்டுவரு கின்றோம் என்றார் கொக்லண்ட்

கிழக்குப்பகுதி நிலவரத்தைப் பார்க்கும் போது ஆயுதக்குழுக் களின் தாக்குதல் அதிகரித்து வரும் நிலையில் அங்கு நிலைமை கட்டுக் கடங்காமல் போவதாக நீங்கள் கருதுகிறீர்களா எனக் கேட்டபோது;

நான் அப்படி நினைக்கவில்லை. அரச படைகளும் விடுதலைப் புலிக ளும் கிழக்குப்பகுதியில்ஸ்திரத் தன் மையை நிலைநிறுத்துவதில் பங் காற்றி வருகின்றார்கள்.

ஆனால் கிழக்குப்பகுதி வன் முறைகள் பெரியதொரு பிரச்சி னைதான். அதைநான் மறுக்கவில்லை. அதற்காக நிலைமை கட்டுக்கடங் காமல் போகிறது என நீங்கள் கூற முடியாது என ஹெறாக்லண்ட் தெரிவித்தார்.

## கொடுப்பனவு வழங்கல்

வட்டக்கச்சி சிவிக் சென்ரர் 10 வீட்டுத்திட்டம் வாழ் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய மக்க ளுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

வட்டக்கச்சி கரைச்சி, கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிரா மிய வங்கியால் இரு கிராமங் களைச் சேர்ந்த 98 குடும்பங்க ளுக்கு இவ்வாறு பணம் வழங்கப் பட்டது. (12)

# நடமாடும் காணி அலுவலக சேவையில் அனேகர் பயனடைவு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சிக் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தின ரால் தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரமாக மாற்றுவதற் கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரைச்சிபிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் தலைமையில் நடமாடும் காணி அலுவலக சேவைகள் மூலம் கிராமம்கிராமமாக மேற்படி நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கடந்த மாதம் இராமநாதபுரம், மாயவனூர் இரத்தினபுரம், திருநகர், ஆகிய கிராமங்களில் காணி அலுவலக நடமாடும் சேவைமூலம் அந்தந்தக் கிராமங்களில் வைத்து காணி அலுவலக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பெற்றது.

இந்நடவடிக்கை மூலம் நான்கு கிராமங்களிலும் 95 தற்காலிக காணி அனுமதிப் பத்திரங்களை நிரந்தரக் காணி அனுமதிப்பத்தி ரமாக மாற்றுவதற்கான நடவடிக் கைகளும், 221 புதிய காணி பதிவு களும் 25 காணி மாற்ற நடவடிக் கைகளும் 125 காணி சம்பந்தமான விசாரணைகளும் மேற்கொள்ளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஊரியான் கிராமத்தில் கடனுதவி வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத் தினால் ஊரியான் கிராமத்தில் கெயார் நிறுவன உதவியுடன் கடனுதவி வழங்கும் நிகழ்வு கடந்த 28-ஆம் திகதி பி.பகல் 3.00 மணிக்கு நடை பெற்றது. பெ.அ.பு. நிறுவன இணைப்பாளர் மா.செல்வி தலைமையில் ஆரம்பமான நிகழ்வின் ,தலைமையுரையில் கடன் திட்டச் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகளை அவர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து கெயார் நிறுவன பிரதிநிதி திட்டமுக்கியத்துவம் அதன் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்களை வழங்கியதுடன் 25 பயனாளிகளுக்கு மூன்று லட்சத்து 30 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான நிதி கால் நடைவளர்ப்பு சிறு தொழிலுக்கென வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாதர் சங்க செயலாளர் கிராம அபிவிருத்தி சங்க பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தகவல் தொழில் நுட்ப போதனாசிரியர் ஆட்சேர்ப்புக்கு நேர்முகப்பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

தகவல் தொழில் நுட்ப போத னாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற் கான நேர்முகப் பரீட்சை மன்னார் கச்சேரியில் 2004.06.09 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெற வுள்ளது. கீழ்வரும் பரீட்சார்த் திகட்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக் கப்பட்டுள்ளன.

செல்வி.தி.ரமேஜினி, திருவை யாறு. எஸ். சதீஸ்குமார், கிளி நொச்சி. இ.செல்வஅரசன், கிளி நொச்சி. கே.ஜீவலிங்கம் , புதுக்குடி யிருப்பு, செ.ரமேஸ், தொண்டமான் நகர். குறித்த பரீட்சார்த்திகளை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைச் சான்றிதழ், வேலை அனுபவம் தொடர்பான சான்றிதழ், இரண்டு , நற்சான்று பத்திரங்கள் என்பவற்றுடன் உரிய தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமுக மளிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் தி.இராசநா யகம் வேண்டியுள்ளார். (சோ)

# வடக்கு- கிழக்கின் அபிவிருத்திக்கு உலகவங்கி தொடர்ந்து உதவிபுரியும்

## -உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர்ஹறரால்ட்

(கிளிநொச்சி)

“இது ஒரு ஆக்கபூர்வமான சந்திப்பு. புரிந்துணர்வுடன் மேற் கொள்ளப்பட்டது அடுத்த கட்ட நட வடிக்கை என்ன என்பதைத் தீர்மானிக்கும் ஒரு கலந்துரை யாடலாகவே அமைந்திருந்தது.

உலக வங்கி நாட்டினதும் வடக்கு கிழக்கினதும் நிலவரத்தை நன்றாகவே உணருகின்றது.

நாங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பதிலும் உதவிகள் புரிவதி லும் தொடர்ந்தும் ஈடுபடுவோம் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு உதவி புரிவோம். அத்துடன் சமா தான முன்னெடுப்புக்கும் எமது ஆதரவு கண்டிப்பாக உண்டு”

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களுடன் கலந்துரை யாடலை நடாத்திய பின் ஊடக வியலாளர்களிடம் பேசிய உலக வங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹறால்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பேச்சுவார்த்தை மிகவும் முக்கிய மானது. அது சிறந்த வழிகளில் சென்று சமாதான முன்னெடுப்பில் நம்பிக்கையைப் பெருக்குவதற்கு முக்கியமானது.

நாங்கள் வடக்கு மக்களின் வாழ்விற்காக உதவி புரிய உள் ளோம் இந்தப் பிரதேசங்களின் அபி விருத்திக்கு உதவிசெய்வது தொடர்பாக உலகவங்கி தொடர்ச் சியான கலந்துரையாடல்களை நடத்தும்.

சமாதான முயற்சிகள் ஆரம் பிக்கப்பட்டு வெற்றி பெறும் நிலை யில் தொடர்ந்தும் உதவிகள் வழங் கப்படும். மற்றும் அவற்றை நடை முறைப் படுத்துவதில் உள்ள பிரச் சினைகள் குறித்தும் ஆராயப் பட்டது.உண்மையில் இன்றி லிருந்து மூன்று வாரத்தில் இலங் கையின் வடக்கு -கிழக்கு பகுதிக் கென 65 மில்லியன் டொலர் நிதியு தவி வழங்க எமது சபை அங்கீ காரம் வழங்கும் என நான் நம்பு கிறேன். என்றார். (சோ)

# முன்பள்ளி சிறார்களின் திறனாய்வுப்போட்டி

(உடையார்கட்டு)

உடையார்கட்டு- இருட்டுமடு மகேஸ்வரன் முன்பள்ளிசிறார்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா முன்பள்ளி மைதானத்தில் கடந்த சனிக் கிழமை 2.30 மணிக்கு சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமானது.



மைதான நிகழ்வுகளாக இசையும் அசைவும், சிறார்களின் திறனை வெளிப்படுத்தும் விளையாட்டு நிகழ்வுகள், வினோதஉடை நிகழ்வு என்பன இடம் பெற்றன தொடராக முன்பள்ளிச் சிறார்களுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது.இந்த வருடாந்த விளையாட்டு விழாவைச் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமும் பெற்றோரும் இணைந்து ஒழுங்கு படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (19)

# மட்டக்களப்பில் முன்பள்ளிகளை பொறுப்பேற்க தமிழர் புனர்வாழ்வு கழகத்திடம் வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன் பள்ளிகளை பராமரிக்கும் நடவடிக் கையினை ‘தடாகம்’ நிறுவனம் திடீ ரென இடை நிறுத்தியுள்ளதன் கார ணமாக மட்டக்களப்பு, வாழைச் சேனை கோறளைப்பற்று கற்குடா ஆகிய பகுதிகளில் இயங்கிவந்த 27 முன்பள்ளிகள் இயங்கமுடியாது பலத்த இடர்பாடுகளை எதிர் நோக் கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக துர்க்கா முன்னிலை பாடசாலை, துர்க்கா தேவிமுன்னிலை பாடசாலை, சிறீவாணி முன்பள்ளி,விபுலானந்தா முன்பள்ளி, விக்கினேஸ்வரா முன்பள்ளி,சரஸ்வதி முன்னிலைப் பாடசாலை, வாணி விபுலானந்தா முன்பள்ளி, வாணி பாலர் பாட சாலை, சிறீமுருகன் முன்பள்ளி சிவசக்தி முன்பள்ளி, பாரதி முன் பள்ளி, வளர்மதி பாடசாலை, சிறீ கண்ணகி முன்பள்ளி, ஆறுமுகா பாலர் பாடசாலை, சிறீவிக்கினேஸ் வரா முன்பள்ளி, பவன மல்லிகை பாடசாலை, சிறீமகாவிஷ்ணு முன் பள்ளி கலைவாணி முன்பள்ளி, வளர்மதி முன்னிலை பாடசாலை, கலைமகள் முன்பள்ளி, பராசக்தி முன்பள்ளி,சிறிபாலாமுருகன் முன்பள்ளி வைரவர் முன்பள்ளி, கௌரிபாலர் பாடசாலைஎன்பன உள்ளிட்ட27முன்பள்ளிகள் இயங்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக முன்பள்ளிகளில் கல்வி கற்ற சிறார்கள்முதல் ஆசிரியர்கள்வரை பலத்த இடர் பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளதாகவும் தெரியவந்துள் ளது.

இதன் காரணமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கற்குடாப் பகுதியிற் சென்று முன்பள்ளி களைப் பொறுப்பேற்று அவற் றினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கற்குடாப் பகுதியி லுள்ள மற்றைய முன்பள்ளி களையும் பொறுப்பேற்று செயற் பட வைப்பதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளும் வண்ணம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடம் முன்பள்ளி நிர்வாகத்தினர் வேண் டுகை விடுத்துள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது. (சோ)

# இன்றைய இறுக்க நிலையைக் கடந்து பேச்சுவார்த்தைக்கு அரசு முன்வருமா?

சிறிலங்காவின் சமாதான முன்னெடுப்புக்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன என கடந்த வாரங்களில் பேசப்பட்ட விடயங்களும் எல்லோரையும் உற்று நோக்க வைத்த சம்பவங்களும் இறுகிப்போன ஒரு கூட்டத்துக்குள்ளே சென்றுவிட்டன. ஆரம்ப முயற்சியிலே இவ்வாறு இறுக்கமான நிலைக்கு தள்ளப்பட்டன. மீண்டும் பலரினதும் மனங்களிலும் சந்தேகங்களை எழுப்பியுள்ளதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அது ஒரு கசப்புக்கலந்த பானமாகவே அனைவராலும் உள்ளெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்றைய அரசியலின் நகர்வுகளுக்கு அனைவரும் தத்தமது ஊகங்களுடன் கூடிய கருத்துக்களை வெளியிடுவதோடு நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்தும் வருகின்றனர்.

புதிய அரசு பதவியேற்றவுடன் ஏற்படுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான முன்முயற்சிகள் திடீரென ஒரு இறுக்க நிலையை அடைவதற்கான காரணங்கள் எவை? இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.தே.முன்னணியினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான



நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருதரப்பாலும் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டு பேச்சுக்கள் முதற்சுற்று இரண்டாம் சுற்று என ஆறு சுற்றுப பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகள் தொடரப்பட வேண்டிய நிலையிலேயே ஒரு தேக்க நிலையை அடைந்திருந்தது என்பது யாவரும் அறிந்ததே. இந்த நிலையிலேயே இரு வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த அதிகார மையங்கள் தமக்கிடையிலான அதிகாரப் போட்டியினால் இழுபறிப்பட்டன. ஒரு கட்டத்தில் ஆட்சியைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவிப்பில் இது முடிந்தது. ஐ.தே.முன்னணி அரசின் மேல்பல குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி ஒருவாறு சிங்கள மக்கள் மத்தியிலே வாக்குறுதிகளை வீசி கூட்டணி அமைத்த கட்சி பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. ஆயினும் அது பாராளுமன்றத்திலே பெரும்பான்மையைப் பெறாத நிலையில் சமாதான முயற்சிகளைத் தொடங்கும் நடவடிக்கைகளில் இறங்கியது. அதாவது சனாதிபதி சந்திரிகா உத்தியோகபூர்வமாக அனுசரணை வழங்கி வந்த நோர்வே அரசுக்கு அழைப்பை விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்று இலங்கை வந்த நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களைக் கொண்ட உயர்குழுவின் இருதரப்பினரோடும் முன்னாயத்தங்களுக்கான சமரசப் பேச்சில் ஈடுபட்டனர். இவ்வாறான பேச்சுக்களின் போதே நோர்வே தரப்பினரின் ஊடாக விடுதலைப்புலிகள் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்தனர். இதனை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் பேச்சுக்களைத் தொடங்குவதில் தமக்கு சிக்கலேதுமில்லையென திட்டவட்டமாகத் தெரியப்படுத்தியிருந்தனர். அதாவது.

1.தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொண்டதை அடிப்படையாக வைத்து புலிகளுடன் மட்டும் பேசவேண்டும்.

2.புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்டத்தை அடிப்படையாக வைத்தே பேச்சுக்கள் தொடங்கப்படுதல் வேண்டும்.

3.பேச்சுக்கள் வெளிநாடுகளிலே இடம்பெற வேண்டும்.

4.இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே இறுதித் தீர்வுபற்றிப் பேசப்படுதல் வேண்டும்.

என்பன போன்ற கோரிக்கைகள் அதில் முக்கியமானவைகளாகக் காணப்பட்டன. இந்த நிலை மைகளுக்கு உடன்பட்டு வருவ தாக ஆரம்பத்தில் சந்திரிகா அரசு காட்டிக்கொண்டு இருந்தாலும், பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி குறிக்கும் பணியில் நோர்வேத்தரப்பு மும்முரம் காட்ட முற்பட்ட வேளை அரசதரப்பிலிருந்த இணக்கமின்மையானது இவ்வாறு இறுக்க மின்மையயானது இவ்வாறு இறுக்க நிலைக்குக் காரணமாக அமைந்தது.

இந்த நிலைமை தோன்றியமைக்கு பிரதான காரணமாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்குள்ளே உருவாகியுள்ள சமாதானம் தொடர்பான கருத்து வேறுபாடுகளே காரணம் ஆகும். குறிப்பாக கூட்டுக்கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு ஆரம்பத்தில் இணக்கத்தைத் தெரிவித்திருந்தாலும் பின்னர் இவர்களின் கொள்கைகளும் நோக்கங்களும் மாற்றமடைந்தன போலவே காணப்படுகிறது. அதாவது புலிகளுடன் பேசவேண்டிய அதேவேளை புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மற்றைய தமிழ்க்குழுக்களுடன் பேசவேண்டும் என்றும் கூறினர். அதேவேளை இப்பேச்சுக்களுக்கான அனுசரணை வழங்கிக்கொள்ள முடியாது மாறாக இந்தியாவின் பங்களிப்பை இதற்குள்ளே பூரணமாக இணைக்க வேண்டும் என்பதும் அவர்களின் வாதமாகும். இவ்வாறு ஜே.வி.பி.யினர், சந்திரிகா இணங்கிவந்த சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோடத் தொடங்கியுள்ள நிலையிலேயே சந்திரிகா சற்றுப்பின்வாங்கியுள்ளார். ஆட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமாயின் அவர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தே தீரவேண்டிய கட்டாயநிலைப் பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலைமையிலே உள்ளார்.

ஆனால் தமது பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.யினை இந்த சமாதான நகர்வுகளுக்குள்ளே ஈடுபடுத்தி அவர்களை அனுசரித்துப் போக வேண்டிய தேவையும் சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்கிறது புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஏற்க முடியாது எனக் கூறிவரும் ஜே.வி.பி. எவ்வாறு சந்திரிகாவின் சமாளிப்பிற்கு இணங்கிப் போகும்?

இந்த நிலையில் சமாதானத்தை ஜே.வி.பி.யினரின் ஆதரவு இன்றித் தொடர முடியுமா? அல்லது ஜே.வி.பியை ஓரம் தள்ளி விட்டுச்சமாதானப் பேச்சுக்களைத் தொடரப் போகிறாரா? என்பதை சந்திரிகாவின் காய் நகர்த்தல்களை சற்றுப் பொறுத்திருந்து பார்ப்பதன் மூலமே விடை கூற முடியும்.

எது எவ்வாறு இருப்பினும் தேர்தல் கால வாக்குறுதிகளை ஐ.ம.சு முன்னணி வழங்கும் போது தாம் சமாதானத்தை நேரிய பாதையிலே சகல மக்களும் திருப்தி கொள்ளும் வகையிலும் வெளிப்படையாகவுமே தொடங்கப் போவதாகவும் வாக்களித்தது. ஐ.தே. கட்சியின் சமாதான நகர்வுகள் நாட்டை ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் அது தான நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் அது மக்கள் மத்தியிலே தெளிவற்ற ஒரு நிலைப்பாட்டைக் கொண்டதாகவும் இருப்பதாக குறைகூறியவர்கள் இதிலிருந்து எவ்வாறு மாறுபட்ட விதத்திலே சமாதான நகர்வுகளை செய்யப் போகின்றார்கள் என்பதுவும் இன்றுள்ள சந்தேகத்திற்குரிய கேள்விகளாகவே இருக்கின்றன.

ஸ்ரீபன்

இதனைவிட சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்கித்தான் ஆகவேண்டியதன் அவசியம் வேறு பல விடயங்களிலும் தங்கியுள்ளது. அதாவது இன்றுள்ள நாட்டின் பொருளாதார நிலையில் நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கும் அபிவிருத்தி புனர்நிர்மாணப் பணிகளைத் தொடங்குவதற்குமாக ஏற்கனவே உறுதி வழங்கப்பட்டிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் நிதி உதவி காலங்களில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் குறிப்பாக அரச ஊழியர்களுக்கான 70% சம்பள உயர்வு, வேலையற்றிருக்கும் 27ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்குமாக இது போன்ற பல வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயினும் கூட அரசிடம் நிதியில்லை இதனை நிறைவேற்ற வேண்டுமாயின் எந்த இறுக்கங்கள் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டாலும் அவற்றைத் தாண்டி சமாதானப் பேச்சுக்களை தொடங்கியே ஆக வேண்டும் அத்துடன் அது முன்னேற்றப்பாதையில் நகர்ந்து செல்லவும் வேண்டியது அரசினது மிக முக்கிய தேவையாக உள்ளது.

இனவாதமும் எதிர்ப்பலைகளும் எப்



பொழுதும் இருந்து வந்ததே வரலாறு. இதனை சரியாகப் புரிந்து கொண்டு சந்திரிகா தன்னிடம் உள்ள அதிகாரத்தையும் சந்தர்ப்பத்தையும் சரியான முறையிலே நேர்மையான வழியிலே தற்துணிவுடன் செயற்பட்டு 50 ஆண்டுகளாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்க திடசங்கற்பம் பூண்டு முடிவுகளை எடுக்க வேண்டிய நேரத்தில் உள்ளார்.

இவ்வாறு முற்படுவாராயின் தமிழ் மக்களும் சரி அமைதியை விரும்பும் மக்களும் சரி அவரின் நடவடிக்கைகளை ஆதரிப்பர். மாறாக அவர் இனவாதிகளின் பேச்சுக்கும் வேண்டுகோளுக்கும் அடிபணிந்து போக வேண்டிய அவசியமோ அல்லது திருப்திப் படுத்த வேண்டிய தேவையோ இல்லை. அவர்கள் அரசியலில் இருந்து ஓரம் கட்டப்படும்நிலைக்குக் கூட ஆளாவார்கள். ஆனால சந்திரிகா இவ்வாறு நேர்மையான முடிவை எடுப்பாரா?

# இராணுவ வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட 37 கிராமங்கள் மட்டக்களப்பில் இனங்காணல்

(அலுவலகசெய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள 37கிராமங்களை புனர்வாழ்க்கழகத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர். இனங்கண்டுகொண்டுள்ளனர்.

இவற்றுள் பாலையடிவெட்டை, வெல்லாவெளி, புல்லுமலை, வவுணதீவு, கண்ணாபுரம், கோமதியாமடு போன்ற இடங்களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

பாலைவெட்டைக்கிராமத்தில் புதிதாக மத்திய மருந்தகம் அமைக்கப்பட வேண்டியுள்ளதன் காரணமாக மிதிவெடிகளை அகற்றித் தருமாறு மட்டக்களப்பு அரச அதிபர்கேட்டதற்கு இணங்க மனித நேய கண்ணிவெடிஅகற்றும் பிரிவினர் வெடிபொருட்களை அகற்றி கண்ணிவெடிகள் அச்சுறுத்தல் அற்ற பிரதேசமாகப் பாதுகாப்பை உறுதி செய்து வழங்கியுள்ளனர்.

சுமார் 4224 சதுர கிலோமீற்றர் நிரப்பரப்பில் துப்புரவு செய்யப்பெற்றுள்ளதுடன் 150க்கு மேற்பட்ட வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன் வவுணதீவுக் கிராமத்தில் 10 ஏக்கர் காணி நீர் விநியோகம் ஆரம்பிக்கப் பெறவுள்ளதால் மிதிவெடிகளை அகற்றித் தருமாறு விடுக்கப்பெற்ற வேண்டுகோளுக்கு இணங்க மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் இங்கு 48 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புல்லுமலைப் பிரதேசத்திலும் மக்கள்மீள் குடியமர்ந்து வருவதால் அங்கும் மிதிவெடிகள் அகற்றும் பணி நடைபெற்று வருகின்றது. 11கண்ணிவெடிகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தகவல்களையும் பெற்று கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவினர் துரிதகதியில் மிதிவெடிகளை அகற்றி உயிர், உடல் இழப்புக்கள் பொது மக்க ளுக்கு ஏற்படாதவாறு செயற்பெற்று வரு கின்றனர். மயிலந்தனை, குறிஞ்சாமுனை, ஏறாவூர், வந்தாறு, மூலை போன்ற இடங்க ளில் இவ்வாறான மனிதாபிமானப் பணிகள் நடைபெற்றுள்ளன.

1/3/2003இல்கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுப்பிரிவு MAGநிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெறிப்படுத்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதற் கட்டமாக 40 பேருக்கு மிதிவெடிகள் அகற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் இவ்வணியினரே மட்டக்களப்பில் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனரென தமிழர் புனர்வாழ்வுக்கழக குறிப்பேட்டின்மூலம் தெரியவந்துள்ளது. (சோ)

## பேருந்து-பாரஊர்தி மோதல் 21 பேர் படுகாயம்!

(கொழும்பு)

பெல்மதுலையில் பயணிகள் பேருந்தும் பாரஊர்தி ஒன்றும் நேற்று முன்தினம் மோதிக் கொண்டதில் 21 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் நான்கு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

வாகனங்கள் வேகமாகச் செலுத்தப்பட்டமையே இந்த விபத்திற்குக் காரணம் என பொலிசார் தெரிவித்துள்ளனர். மேற்படி விபத்தில காயமடைந்தவர்கள் இரத்தினபுரி பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முத்துஜயன்கட்டு உபதபாலகத்திற்கு அடிப்படை வசதிகள் வேண்டும்

முத்துஜயன்கட்டு பகுதிக்குரிய உப தபாலகம் வசதிக்குறைவுகள் மத்தியில் இயங்கி வருகின்றது.

மேற்படி தபாலகத்துக்குரிய கட்டடம் 1988ம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவ தாக்குதலில் சேதமுற்றது. பல வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் தபாலகக்கட்டடம் முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை அத்துடன் இத்தபாலகத்திற்குரிய தளபாட வசதிகள் போதியளவில் நிவர்த்தி செய்யப்படவில்லை மேலும் தபால் கட்டுப் பொதிகள் பழுதடைந்து காணப்படுகின்ற போதும் புதிய தபால் கட்டும்பொதிகள் வழங்கப்படவில்லை. (து)


## மாகாண விளையாட்டுப் போட்டி மன்னாரில்

வடக்குகிழக்குமாகாண விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் மாவட்ட அணிகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 26,27,28ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகள் மன்னார் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஊடகவியலாளர் நடேசனுக்கு வன்னி மக்களின் அஞ்சலி













# அற்புதமான ஊடகவியலாளரின் படுகொலை மூலம் எதிரியானவன் கூறும் செய்தி என்ன?

## இரங்கலுரையில் கேள்வி எழுப்புகிறார் புலிகளின் முக்கியஸ்தர் வே.பாலகுமாரன்



(அலுவலக செய்தியாளர்)

ஓர் அற்புதமான ஊடகவியலாளனை எதிரி ஏன் கொன்றான்? இந்தக் கொலைக்கூடாக எதிரி என்ன செய்தியைச் சொல்லவிரும்புகின்றான்? என கேள்வி எழுப்பியுள்ளார். விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன்.

ஊடகவியலாளன் ஜி.நடேசனிற்கு இரங்கலுரை நிகழ்த்துகையில் அவர் இந்த கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அந்த இரங்கலுரையில் அவர் மேலும் கூறுகையில்;

இந்தப்பெரிய இடியால் துவண்டிருக்கும் நடேசன் அவர்களின் குடும்பத்தினரிற்கும் உறவுகளுக்கும் தமிழீழ தேசத்தினுடைய ஆறுதலை தமிழீழ தேசத்தினுடைய நன்றியை தமிழீழ தேசத்தினுடைய என்றும் மறக்கமுடியாத நன்றிக்கடனை நாங்கள் செலுத்திக்கொள்கின்றோம். ஆனால் இந்த தமிழீழ தேசத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பிற்கு யார் ஆறுதல் சொல்லப்போகின்றார்கள் யார் இதற்கு மாற்று வழிகாணப் போகிறார்கள் என்பதுதான் இன்றுள்ள கேள்வி இந்த துயரத்தை அவரின் குடும்பத்தின் தோள்களிலிருந்து இந்தத் தமிழீழ தேசம் வாங்கிக்கொள்ளவேண்டும் இந்த துயரத்தை இங்கு வாழும் அனைத்து தமிழர்களும் உளமார மனமார உள்ளங்களிலே பதித்துக்கொள்ளவேண்டும். இது கொலையல்ல இது தமிழீழ தேசத்தின் மீது நிகழ்த்தப்பட்ட அரசியல் படுகொலை இது கொலையல்ல தமிழரின் ஆன்மாவில் என்றும் மாறாத வடுவாகவே இது ஒரு வரலாற்று நிகழ்வாகிவிட்டது.

எங்கள் தேசத்தில் போராட்டம் இன்னும் முடியவில்லை தேசத்திலே பேரினவாத அடக்கு முறைகள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நீடிக்கத்தான் போகின்றன. என்பதனை நினைவுபடுத்துவதற்காக இப்படுகொலையின் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறான் எதிரி. ஒருபெரிய செய்தியை நாங்கள் இதனூடாக சொல்கிறோம். நாங்கள் தெளிவாகத்தான் இருக்கின்றோம் உங்கள் மாற்றங்களை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். இல்லை. நீங்கள் மாற மாட்டோம் என்று சொன்னால் மறு வழிகள் இருக்கின்றது எவன் வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள மறக்கின்றானோ அவன் அதை வாழ்வதற்கு சபிக்கப்பட்டிருக்கிறான். ஆகவே நீங்களும் சபிக்கப்பட்டிருப்பதற்கு நாங்கள் என்றைக்கும் பொறுப்பாக இருக்க மாட்டோம் என்பதை இந்த நடேசன் சாட்சியாக இங்கே நாங்கள் சொல்கிறோம் இது ஒரு பிரகடனமாகவும் அமையும்.

அவருடைய கட்டுரைகளில் வெள்ளிவிழா ஆண்டிலே புலிகள் என்ற கட்டுரை அற்புதமான தர்க்கரீதியான கட்டுரை இதனை தலைவர் அவர்களே மிகவும் பாராட்டினார். அந்தக் கட்டுரையை நாங்கள் எமது கண்போல காத்து வைத்திருக்கிறோம்.

ஓர் அற்புதமான ஊடகவியலாளனை எதிரி ஏன் கொன்றான்? இந்தக் கொலைக்கூடாக எதிரிஎன்ன செய்தியைச் சொல்லவிரும்புகின்றான்?

புலிகளுக்கு அழுத்தம் கொடுத்து நிபந்தனைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு அழுத்தம் கொடுப்பதற்காக அரசியல் ரீதியாக தீட்டப்பட்ட திட்டமா அல்லது என்றும் பிரிக்க முடி யாத தேசத்தின் வரைபடத்தினை பிரிக்க நினைக்கிறார்களா?

தென்தமிழீழத்தில் இருக்கின்ற தேசிய உணர்வை மங்கச்செய்து தமிழீழத் தேசியத்திலிருந்து தென் தமிழீழத்தை பிரிக்கத்திட்டம் போடுகிறார்களா? அல்லது புலிகளை ஒட்டு மொத்தமாகப் பலவீனப்படுத்தி வாய்ப்புக் கிடைக்கும் பொழுது நசுக்குவதற்கு திட்டம் போடுகின்றார்களா? என்னவாக இருக்கட்டும் எதுவாக இருக்கட்டும் இந்த வீரச்சாவானது ஒரு வரலாற்று நிகழ்வாகமாறப்போகிறது நிச்சயமாக மாறியே தீரும் ஒருவேளை இனி சாவேநிகழாது அல்லது எதுவாகவாவது இருக்கட்டும் எதைத்தான் எதிரியானவன் விரும்புகிறான் என்பது எமது தலைமைக்கு நன்றாகத் தெரியும் எமது தலைவரை யாராவது சரியாக மதீப்பீடு செய்யாமல் தவறாக கணிப்பீடு செய்தால் முடிவு எவ்வாறு அமையும் என்பது வரலாறு காட்டிய உண்மை.

அந்தக்காலம் தொட்டு இன்றுவரை பல பிரதம மந்திரிகள் பல சனாதிபதிகள் எல்லாருமே வந்துபோய்க் கொண்டே இருக்கிறார்கள். இதைத்தான் நடேசன் அவர்கள் தனது கட்டுரையில் " எத்தனை தலைவர்மார்கள் வந்து போய்விட்டார்கள் ஒரே ஒருதலைவர் இருக் கிறார் என்று சொன்னால் இத்தனை தலைவர் களின் உத்திகளையும் உள்வாங்கி இந்தத் தேசத்தின் வரலாற்றை இன்று தலைமை நன்றாக கற்று எங்களுக்கு என்ன இவர்கள் செய்யபோகிறார்கள் என்பதை முன்கூட்டியே உணர்ந்து செயற்படக் கூடிய ஒரு ஆற்றலை நாங்கள் பிரயோகிப்பதற்காக எங்களை எதிரிதூண்டுகிறான்.

ஆகவே இந்தச் சம்பவம் என்பது ஒரு விழிதிறக்கும் செயலாக அமையவேண்டும் ஒன்று சிறிலங்கா அரசாங்கம் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் அல்லது நாங்கள் எடுக்க வேண்டும்.

அதைத்தவிர வேறு வழியேகிடையாது ஆனால் இவையெல்லாம் பக்குவமாகப் படிப்படியாக நாங்கள் செய்வோம் எதிரி எதிர்பாக்கும் எந்த ஒரு காரியத்தையும் நாம் செய்யமாட்டோம் எத்தனை இழப்புக்கள் நேர்ந்தாலும் அதாவது இனியும் இந்த மண்ணிலே கணவனை இழந்த பெண்கள் தோன்றக் கூடாது என எதிர்பார்த்தோம் இனியும் எம் மண்ணில் இப்படியான அரங்குகளில் இரங்கல் உரையை நிகழ்த்தக் கூடாதென நாங்கள் எதிர்பார்த்தோம் ஆனால் இவை நிகழத்தான் வேண்டுமென எதிரி விரும்பினால் சர்வதேசமும் அதைபார்த்துக் கொண்டிருந்தால் இதற்குரிய விலையை வரலாறே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

நடேசனுக்கு பிரியாவிடைகொடுக்க இங்கே கூடியிருக்கும் எமது கண்களிலே நீர்த்துளிகளையாரும் பார்க்க முடியாது. ஏனெனில் நாங்களும் பல்லாயிரம் மாவீரர்கள் நாட்டுப் பற்றாளர்கள் இன்று கடைசியாக நடேசனும் சேர்ந்து எமது அனைத்து மக்களின் கண்ணீர் துளிகளிலும் சேமித்து வைத்துள்ளார்கள் என்பதை சாட்சியாக அந்த குடும்பத்திற்கு சொல்லிச் செல்கிறோம் என்றார். (சோ.ச)

# தமிழ்த் தேசியவிடுதலைக்காக அரும்பணியாற்றியவர் நடேசன்

## அஞ்சலி உரையில் கிளி.அரச அதிபர்

(அலுவலக செய்தியாளர்)

"தனது எழுத்துவன்மை மூலமாகவும் தமிழ்மக்களின் நலனுக்காகவும், தமிழ்த் தேசியவிடுதலைக்காகவும் அரும்பணிபுரிந்தவர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன்."

இவ்வாறு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் அவர்களின் அஞ்சலி நிகழ்வில் உரை நிகழ்த்துகையில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன் அவர்கள் இன்று எம்மத்தியில் மீளாத்துயில் கொண்டுள்ளார். அவரது எழுத்துவன்மை மூலமாக எங்களுடைய தமிழ் மக்களது துயரத்திற்காக மட்டுமன்றி தமிழ்த் தேசியத்தினை வளர்ப்பதற்காகப் போராடியவர். அவருடைய வாழ்வு, தமிழ் மக்களுடைய நலனிற்காகவும் தேசிய விடுதலைக்காவும் பல்வேறுவகையில் பயனளிப்பதாக விருந்தது.

அந்தப் பயன் பாட்டின் விளைவாகவே அவருக்கு இந்நிலை ஏற்பட்டலாயிற்று.

சமாதானம் என்ற காலகட்டத்தில் இத்தகைய ஒரு நிகழ்வினை எவரும் எதிர்பார்த்திருக்காத நிலையில் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

அவருடைய எழுத்துருவாக்கம் மிகவும் எளிய நடைமுறையில், நியாயமானதாகவும்; பல்வேறு புள்ளி விபரங்களுடன் வரலாற்று ரீதியாக எடுத்தியம்புகின்ற பாரிய நியாயத்தன்மை கொண்டதாகவும், அவர் எடுத்துக் கொண்ட கருத்தினை வலுவூட்டுவதாகவும், எல்லோரும் நல்ல முறையில் புரியக்கூடிய வகையில் இருந்தது அந்தவகையில் அவருடைய எழுத்தானது அவருக்கே இயமனாக இருந்தாலும் அந்த எழுத்தின் மூலம் சாதித்தவை அதிகம். எங்களது தமிழீழ தேசத்தினுடைய விடுதலையினைப் புனிதப்படுத்தும் வகையில் அவரின் எழுத்துக்கள் அமைந்திருந்தன.

எனவே தொடர்ந்தும் களைக்காது ஊடகவியலாளர்கள் அவர் வழியில் தேசியத்தினை பலப்படுத்த முன்வர வேண்டும் என அவர் மேலும் கூறியுள்ளார். (சோ.ச)

# ஊடகவியலாளர் துணிச்சலோடு பணியாற்ற தமிழ்ச்சமூகம் உறுதுணையாக இருக்கவேண்டும்

## -ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர்

(அலுவலக செய்தியாளர்)

ஊடகவியலாளர்கள் உண்மை நிலைப்பாட்டை உலகிற்கு எடுத்துக் கூறுபவர்கள் அதனால் எதிரிகள் எப்பொழுதும் விழுத்துவதற்கு தருணம் பார்த்திருப்பார்கள். ஆகவே அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென என்னிடம் அடிக்கடி கூறுவார். அதேவேளை தானும் பாதுகாப்புடனேயே செயற்படுவதாகவும் கூறுவார். அப்படியிருந்தும் எதிரிகள் அவரை படுகொலை செய்துவிட்டார்கள்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் துரைரத்தினம் ஊடகவியலாளர் ஜி.நடேசனுக்கான அஞ்சலி உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் என்ற ரீதியிலே ஒன்றை மட்டும் கூறவிரும்புகின்றேன். தமிழ்ச் சமூகம் ஊடகவியலாளர்கள் துணிச்சலோடு பணியாற்ற உறுதுணையாக இருக்கவேண்டும் என்பது தான் அது. என்றார். (ச.சோ)

# அப்பாவிகள் அழிக்கப்படும்போது மக்களிடையே சுதந்திரவேட்கை கொழுந்துவிட்டெரியத்தொடங்கும்

## – மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன்

(கிளிநொச்சி)

"இந்த நாட்டிலே சிறுபான்மை இனத்திற்கு நிகழ்த்தப்படும் கொடுமைகளைத் தன்னுடைய பேனா முனை மூலம் உலகிற்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருந்த ஒரு எழுத்தாளர். ஊடகவியலாளர் ஜிநடேசன். இவர் சில வெறி பிடித்தவர்களினால் இன்று மரணமெய்திபிருக்கிறார். துப்பாக்கி வேட்டு சத்தங்களினால் ஒருவனுடைய சுதந்திர உணர்வை மௌனமாக்கி விட முடியாது. இப்படிப்பட்ட அப்பாவிகள் எந்த ளவுக்கு அழிக்கப்படுகிறார்களோ அந்தளவுக்கு மக்கள் மனதிலே விடுதலை வேட்கை கொழுந்து விட்டெரியத்தான் தொடங்குமே தவிர, யாரும் அஞ்சி ஓட மாட்டார்கள். இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெசந்திரசேகரன் அவர்கள் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இவா துப்பாக்கி தூக்கியவர் அல்ல; யுத்தம் செய்தவர் அல்ல சிந்திக்க வைத்தவர், என்ன நடக்கிறது என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டியவர். அப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டிலே இருக்கக் கூடாது. அப்படியானவர்களுக்கு இந்த நாட்டிலே இடமில்லை என்றால் இந்த நாட்டிலே அப்படிப் பட்டவர்களுக்கு பதில் சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும். இது அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் நடைபெற்ற ஒன்றல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேசத்திலே ஒரு சம்பவம் நடக்கிறது என்றால் அதனை அரசுக்கு கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், கண்டறிவதற்கு அவர்களாலே இயலவில்லை என்றால், உலகம் ஏற்றுக்கொள்ளாது.

இதற்கு முன்பு பலபேர் இப்படி உயிர்த்தியாகம் செய்திருக்கின்றார்கள். எதைப்பற்றியுமே அரசாங்கம் இதுவரையிலும் ஆராய்ந்தறியவில்லை என்று சொல்கிறார்கள் உண்மை அதுவல்ல.

இந்த நாட்டிலே அமைதியை விரும்புகிறவர்கள் கூட சுதந்திரமாக சிந்திக்க விரும்புகிறவர்கள் தான் அடிமைகளாக வாழ்கிறவர்கள் அல்லது யுத்தமே வேண்டாம் என்று நினைக்கிறவர்கள் கூட இந்த நாட்டிலே தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என நினைப்பவர்கள் தான் இவருடைய இறப்பு இவர் பழிவாங்கப்பட்டிருக்கிற நிலைமை எல்லா மக்களுக்கும் ஒரு அக்கறுத்தலாகும் இந்தநாட்டிலே பணியில் பட்டதை எவரும் பேசக்கூடாது எழுதக்கூடாது என்ற ஒரு நிலைமை இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ஆனால் ஒன்றை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இதைவிட எதிர்ப்புகளை சந்தித்தவர்கள் தமிழ் மக்கள் இதை விடப்பெரிய அழிவுகளைச் சந்தித்தவர்கள் தமிழ் மக்கள் ஆனால் ஒவ்வொரு அழிவுக்குப் பின்னாலும் ஆக்கபூர்வமான எழுச்சியைத்தான் வரலாறு கண்டிருக்கிறது.

இவருடைய மறைவு குடும்பத்தாருக்குப் பெரும் இழப்புத்தான். ஆனால் எம்மைப்பொறுத்த வரையிலும் இழப்பு ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்துகின்றது. நம்மை மற்றவர்கள் அழிக்க அழிக்க நமது வளர்ச்சியை தடுக்க தடுக்க அதைவிட சக்தி பெற்றவர்களாக வளர வேண்டும் என்ற வெறிதான் நமது மனதிலே ஏற்படுகின்றது. ஆகவே நடேசன் அவர்கள் நம்மைவிட்டு மறைந்திருக்கலாம் ஆனால் அவர்கள் தொடங்கிய அந்தப் பணி முடியாது அது தொடரும். அதைச் செய்வதற்கு பல பேர் இருக்கிறார்கள். ஆனால் உறுதியாக அந்தக் குடும்பத்தாருக்கு ஒரு சொல்லைச் சொல்லுகிறேன். அவர் மறையவில்லை. அவருடைய நாமம் என்றைக்கும் நிலைக்கும் வரலாற்றிலே நீங்காத இடம் பெறுகின்ற ஒரு ஊடகவியலாளராக அவருடைய பெயர் என்றுமே நிரந்தரமாகும். அந்தக் குடும்பத்திற்கு அவர் தேடி வைத்த சொத்துப் பெருமை அதுதான் என்றார். (சோ.ச)



# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்ணக்கத்துக்கான அமைச்சினால் யாழ் மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி [புழுங்கல்] வழங்கலுக்கான கேள்வி கோரல்

01 யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும்குடும்பங்களுக்கான 2004, ஏப்பிரல், மே,யூன் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கென கீழ்த்தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களிடம் (வரைவுள்ளது.) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடுசெய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| | | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| இல | ப.நோ.கூ.சங்கம் | ஏப்பிரல் (MT) | மே (MT) | யூன் (MT) |
| 01 | சாவகச்சேரி | 185 | 185 | 185 |
| 02 | கைதடி | 52 | 52 | 52 |
| 03 | கொடிகாமம் | 151 | 151 | 151 |
| 04 | உடுப்பிட்டி | 24 | 24 | 24 |
| 05 | கட்டைவேலி நெல்லியடி | 26 | 26 | 26 |
| 06 | பருத்தித்துறை | 95 | 95 | 95 |
| 07 | புலோலி | 16 | 16 | 16 |
| 08 | மருதங்கேணி | 92 | 92 | 92 |
| 09 | யாழ்ப்பாணம் | 109 | 109 | 109 |
| 10 | நல்லூர் | 50 | 50 | 50 |
| 11 | அச்சுவேலி | 52 | 52 | 52 |
| 12 | நீர்வேலி | 45 | 45 | 45 |
| 13 | மானிப்பாய் | 52 | 52 | 52 |
| 14 | பண்டத்தரிப்பு | 51 | 51 | 51 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 40 | 40 | 40 |
| 16 | தெல்லிப்பளை | 152 | 152 | 152 |
| 17 | சங்கானை | 75 | 75 | 75 |
| 18 | சுன்னாகம் | 55 | 55 | 55 |
| 19 | புங்குடுதீவு, நயினாதீவு | 14 | 14 | 14 |
| 20 | வேலணை | 35 | 35 | 35 |
| 21 | ஊர்காவற்றுறை | 36 | 36 | 36 |
| 22 | காரைநகர் | 30 | 30 | 30 |
| 23 | தீவகம் | 60 | 60 | 60 |
| 24 | நெடுந்தீவு | 03 | 03 | 03 |
| | மொத்தம் | 1500 | 1500 | 1500 |

02 கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500/=யை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.06.03ஆம் திகதி தொடக்கம் 2004.06.17ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03 மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/=யை அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும்,கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

04 கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருந்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05 பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர்,மாவட்டக் கேள்விச்சபை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்(அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளதபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக(கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.06.18 பிற்பகல் 2.00மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அப்பொழுது கேள்வி காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

06 கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டு புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

07 கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

08 ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

09 கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது.மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10 கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்டகேள்விச்சபை/ மாவட்டச்செயலகம்,
யாழ்ப்பாணம்.
01.06.2004

(சி-9704)

# மக்களவைத் துணைத் தலைவர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்கத் தயார்

## ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அறிவிப்பு

(புதுடில்லி)

**மக்களவையின் துணைத் தலைவர் பதவியை எதிர்க்கட்சிகளுக்கு விட்டுக்கொடுப்பதற்கு மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி முன்வந்துள்ளது.**

இதனையடுத்து மக்களவைத் தலைவர், துணைத்தலைவர் இருவரையும் போட்டியின்றி தேர்வு செய்வதற்கு தேசிய சனநாயகக் கூட்டணி ஒப்புக்கொண்டுள்ளது.

மக்களவையின் துணைத் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க முன்வந்துள்ளதாக வாஜ்பாயிடம் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் குலாம்நபி ஆஷாத் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

இதனையடுத்தே மக்களவைத் தலைவராக மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சோம்நாத் சட்டர்ஜி தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் துணைத்தலைவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# அயோத்திப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும்

## சங்கராச்சாரியார் தெரிவிப்பு

(புதுடில்லி)

அயோத்திப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் அதற்கு பேச்சு வார்த்தையே சிறந்தது. இதன் மூலமே தான் தீர்வு காணமுடியும்.

இவ்வாறு காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமி டில்லியில் நேற்று முன்தினம் கூறியுள்ளர்.

இதே வேளை அயோத்தியில் இராமர்கோயில் பிரச்சினைக்குநீதிமன்றத்தின் வெளியே பேசித் தீர்க்கப்படவேண்டும் என்றுமுன்பு ஆட்சியிலிருந்த வாஜ்பாய் அரசு கூறி வந்தது. ஆனால் தீர்வு எட்டப்படவில்லை.

புதிதாக ஆட்சி ...ப்டம் ஏறியுள்ள மன்மோகன்சிங் அரசு நீதிமன்றம் மூலமே அயோத்திப் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என்று கூறியுள்ளது.

இந்நிலையில் ஏற்கனவே அயோத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்பு ஈடுபட்ட காஞ்சி சங்கராச்சாரியார்நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

அயோத்திப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு எட்டப்படுவது சிறந்தது.ஆனால் இதுபற்றி என்னிடம்புதிய அரசு கருத்து கேட்கவில்லை. புதிதாக ஆட்சி அமைததுள்ளதால் இனி வரும் காலத்தில் என்னை அவர்கள் அணுகக்கூடும என்றும் அவர்கூறியுள்ளார்.

# ஊழல் புரிந்தோர் மன்மோகன்சிங் அரசில்

## எதிர்ப்பைத் தெரிவிக்க ஜோர்ஜ் பெர்னாண்டஸ் முடிவு

(புதுடில்லி)

ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எல்லாம் மன்மோகன்சிங் அரசில் இடம்பெற்றுள்ளனர் என்று தேசிய சனநாயகக் கூட்டணி முடிவு செய்துள்ளது. இதனை எதிர்த்து விரைவில் இந்திய சனாதிபதி அப்துல்கலாமைச் சந்திக் கவுள்ளதாக தேசிய சனநாயகக் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

இந்த விடயத்தை முன்னிட்டு தமது தேசிய சனநாயகக் கூட்டணி ஒருபோதும் நாடாளுமன்றக் கூட்டத்தைப் புறக்கணிக்க மாட்டாது என்றும் நேற்று அவர் செய்தியாளர்களிடம் புதுடில்லியில் கூறியுள்ளார்.

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் 14வது மக்களவையின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது

(புதுடில்லி)

14ஆவது மக்களவையின் முதல் கூட்டம் நேற்றுநடைபெற்றது. இதுவரையும் இல்லாத பாதுகாப்புடனேயே இந்தக்கூட்டம் நடந்துள்ளது.

மக்களவை உறுப்பினர்கள் அல்லாத எவரும் உரிய அனுமதியின்றி உள்ளே செல்ல முடியாதளவுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த காஷ்மீரில் தீவிரவாதிகள் கடந்த வாரம் தாக்குதல் நடத்தியதையடுத்தே பாதுகாப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது. முக்கிய இடங்களிலும் நாடாளுமன்ற வளாகத்திலும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. அதிரடியாக வாகனங்கள் நுழைய முடியாதபடி தடைகள் ஏற்படுத்தப்பட்டு பாதுகாப்பு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றுள்ளனர். இன்றும் புதியஅமைச்சர்கள் ஏனையோர் பதவியேற்கவுள்ளனர். இவர்களுக்கு அவையின் மூத்தஉறுப்பினர் சோம்நாத் சட்டர்ஜி பதவிப் பிரமாணம் செய்துவைக்கவுள்ளார்.

4ஆம் திகதி புதிய சபாநாயகர் தெரிவு நடைபெறும். அன்றே பிரதமர் மன்மோகன்சிங் புதிய அமைச்சர்களை மக்களவை உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்யவுள்ளார்.

அத்துடன் மாநிலங்களவை நான்காம் திகதி தொடங்கவுள்ளது. 5ம் திகதி வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும். ஏழாம் திகதி இருஅவைகளினதும் கூட்டுக் கூட்டம் ஆரம்பமாகி 10 ஆம் திகதி முடிவடையும்.

இதனிடையே 7ஆம் திகதி கூட்டுக் கூட்டத்தில் இந்திய சனாதிபதி அப்துல்கலாம் உரையாற்றவுள்ளார். இதன்போது புதிய அரசின் திட்டங்கள் பற்றி இவர் அறிமுகம் செய்வார்.

இதனை அடுத்து சனாதிபதி அப்துல் கலாமின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மக்களவையில் மூன்று நாட்களும் மாநிலங்களவையில் இரண்டு நாட்களும் விவாதம் நடைபெறும் ஐந்து கட்டமாக மக்களவைத் தேர்தல நடந்து முடிந்துள்ளது. இதனையடுத்து புதியமக்களவை கடந்த 17 ஆம் திகதி அமைக்கப்பட்டது. இந்தப் புதிய மக்களவையின் முதல் கூட்டமே நேற்று நடைபெற்றது.

# இந்தியா-பாகிஸ்தான் பேச்சுநடத்த முன்வந்தமைக்கு அமெரிக்கா பாராட்டு

(வோஷிஸ்டன்)

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் வெளியுறவு மட்டத்தில் பேச்சுக்கள் நடத்த முன்வந்துள்ளமைக்கு அமெரிக்கா பாராட்டியுள்ளது.

அமெரிக்க வெளியுறவு துறைச் செயலர் றிச்சட்பௌச்சர் நேற்று முன்தினம் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர்மேலும் கூறுகையில், இந்திய பாகிஸ்தான் சமாதானத்தை புதிய மத்தியரசு தொடர்வதாகக் கூறியுள்ளது அது மட்டுமன்றி வெளியுறவு மட்டப்பேச்சுக்களை நடத்துவதற்கும் மத்தியரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதனை அமெரிக்கா வரவேற்கின்றது அத்துடன் இரு நாட்டு சமாதானத்தையும் அமெரிக்கா மிகவும் ஆதரிக்கின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# மாகாண சபைகளைக் கலைக்க வேண்டும் இவை பொதுமக்களுக்கு பெரும் சுமை

## -ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

பொது மக்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்தும் மாகாண சபைகளைக் கலைத்...விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயக்கட்சி அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாகாண சபைகளுக்கென செலவிடும் பெரும் தொகைப் பணத்தை பொது மக்களின் நலனுக்காக செலவிட முடியும் என்றும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு உட்பட பல சலுகைகளை வழங்க முடியும் என்றும் ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு கிழக்கில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாகாண சபைகள் முறை அமுல்ப்படுத்தப்பட்டது.ஆனால் தற்போது வடக்கு-கிழக்கு தவிர ஏனைய மாகாணங்களில் மாகாணசபைகள்அமுலில் உள்ளன.

மக்களின்செலவில் செயற்படும் மாகாண சபைகளினால் எந்த விதமான நன்மையும் இல்லை இதனை உணர்ந்தே ஜாதிகஹெல உறுமய மாகாண சபைத் தேர்தலை புறக்கணித்துள்ளது. எமது அரசியல வாதிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கும் அரசியல் இருப்புக்கும் மாகாணசபைகள் அவசியமாக இருக்கின்றது.

அதே போன்று அரசியல்வாதிகளுக்கு ஒரு பயிற்சிக்கூடமாகவும் மாகாண சபைகள் விளங்குகின்றன.

ஒரு காலத்தில் மாகாண் சபைகள் முறையை கடுமையாக எதிர்த்த ஜே.வி.பியும் இன்று மாகாண சபைகளின் நலன்களை அனுபவிக்கின்றது என கட்சி தெரிவித்துள்ளது.

# சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பந்துல பெல்லால

(கொழும்பு)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக சட்டத்தரணி பந்துலபெல்லால என்பவரை சனாதிபதி நியமித்துள்ளார் இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்தவராவார். பந்துல பெல்லால இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் காலை கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைமைக்காரியாலயத்தில் தனது கடமைகளை பெறுப்பேற்றுள்ளார்.

# போகம்பர சிறைச்சாலை இடம் மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

போகம்பர சிறைச்சாலை இடம்மாற்றப்படவுள்ளது. தற்பொழுது இச்சிறைச்சாலை அமைந்திருக்கும் கண்டியில் இருந்து பல்லேகலவிற்கு மாற்றப்படவிருப்பதாக சிறிலங்காவின் நீதிமற்றும் சட்ட மறுசீரமைப்புக்கள் அமைச்சரான ஜோன் செனவிரத்ன கூறியுள்ளார்.

சிறிலங்காவின் இரண்டாவது பெரிய சிறைச்சாலையான போகம்பர சுமார் நூறுவருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாகவும் சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் இடப்பற்றாக்குறையை எதிர்நோக்கியவாறு அடைத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர்மேலும் தெரிவித்துள்ளார்.

## - நீதிமன்ற அவமதிப்புக் குறித்த வழக்கில் -

# எஸ்.பி.திஸாநாயக்கவின் உரையை பார்வையிட சட்டத்தரணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மீது உயர் நீதிமன்றத்தை அவமதித்ததாகத் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணை மீண்டும் அடுத்தமாதம் முதலாம திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை எஸ்.பி.திஸாநாயக்க நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தெரிவித்த கூற்று அடங்கிய வீடியோ நாடாவை பார்வை இடுவதற்கு பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எஸ்.பி.திஸாநாயக்கவின் சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளிற்கு இணங்க பிரதம நீதியரசர் சரத் என் சில்வா இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

# கிராமசேவகர்களுக்கான மேலதிக கொடுப்பனவை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

கிராமசேவையாளர்கள் தமது கடமையாற்றும் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு கடமையாற்றுவதற்குச் செல்லும் பொழுது கொடுக்கப்படும் மேலதிக கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்பொழுது கொடுக்கப்படும் 75ரூபா 500ரூபாவாக அதிகரிப்பதுடன் வேறு பகுதிகளுக்கு செல்லும் பொழுது வழங்கப்படும் 200ரூபா 1000ரூபாவாக அதிகரிக்கப்படும் என உள்நாட்டு அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

மேலும் இவர்களுக்கு ஐந்து மாதங்களுக்கான மிகுதிக் கொடுப்பனவுகள், பிரயாணப்படிகள், பதவி உயர்வுகள் வழங்கப்படு வதற்கு அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரு பொலிசார் விளக்கமறியலில்

வெலிப்பனைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றுடன் சம்பந்தப்பட்ட இரண்டு சிறிலங்காப் பொலிசார் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த ஞாயிறு பாரஊர்தி ஒன்றை நிறுத்த முற்பட்டவேளையில் பாரஊர்தி தடையை மீறி சென்றமையினால் அதன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் இவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவர் பலியானார். இதனையடுத்து கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் மத்துகம நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (32)

– மே. இந்தியத்தீவு–பங்களாதேஷ் முதலாவது டெஸ்ட் போட்டி –

# மேற்கிந்தியத்தீவைத் திணறடித்த பங்களாதேஷ் சரித்திரபூர்வமான சாதனை படைத்தது

மேற்கிந்தியத்தீவிற்கு தனது கன்னிச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் நிறைவுபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் சரித்திர பூர்வமான வெற்றி தோல்வியற்ற முடிவொன்றை பங்களாதேஷ் ஏற்படுத்தியுள்ளது.

சென்லூசியா மைதானத்தில் நிறைவுபெற்ற மேற்படி போட்டியில் முதற்தடவையாக பங்களாதேஷ் அணி மழை குறுக்கிடாமல் போட்டி ஒன்றை வெற்றிதோல்வியற்ற முறையில் நிறைவுசெய்தமை போட்டியின் சிறப்பம்சமாகும்.

போட்டியின் இறுதிநாளில் 29 ஓவர்களில் 336 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டாடிய மேற்கிந்தியத் தீவுகள் தமது இரண்டாவது இனிங்ஸில் 23 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் இரண்டு சதங்களைப் பெற்றுக்கொண்ட பங்களாதேஷ் வீரர்கள் இரண்டாவது இனிங்ஸிலும சதம் ஒன்றைப்பெற்று பங்களாதேஷின் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மூன்று சதங்கள் ஒரே போட்டியில் பெறப்பட்ட முதலாவது தடவையாகவும் இது அமைந்தது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 416ஓட்டங்களை முதல் இனிங்ஸில் பெற்றது. அணித்தலைவர் ஹபிபுல்பசார் 113 ஓட்டம், முகமட்ரபீக்101ஓட்டம், முகமட் அஷ்ரபுல் 81 ஓட்டம்.

மேற்கிந்தியத்தீவு தனது முதல் இனிங்ஸில் 352 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. கிறிஸ்கெய்ல் 141 ஓட்டம், பிரைன்லாறா 53 ஓட்டம்.

பதிலளித்த பங்களாதேஷ் தனது இரண்டாவது இனிங்ஸில் நான்காம நாள் ஆட்ட நேர முடிவின் போது 6 விக்கெட்டுக்களை இழந்து 94ஓட்டங்களைப் பெற்றிருந்தாலும் இறுதிநாளான நேற்று முன்தினம் நிதானமாக ஆடி 271 ஓட்டங்களை 9 விக்கெட்டுக்களை இழந்து பெற்ற போது தனது இனிங்ஸை இடைநிறுத்தியது.பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இனிங்ஸ் ஒன்றை இடைநிறுத்தி எதிரணிக்கு துடுப் பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை வழங் கியது இதுவே முதல் தடவை என்று கருதப்படுகிறது.

பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் காலித் மசூத் ஆட்டமிழக்காது103 ஓட்டங்களையும் ரஜின்சிலிம் 51 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவின் பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர் ராம்நரேஷ்ரர்வான்37 ஓட்டங்களுக்கு4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடமுடியாத வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் ஆட்டம் நிறுத்தப்படும்போது113 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

இதில் கிறிஸ்கெய்ல் 66ஓட்டங்களையும், சிமித்40 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர்.

மேற்படி இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட போட்டி நாளை ஜமேக்காவில் நடைபெறவுள்ளது.



இங்கிலாந்துக்கெதிராக பிரான்சில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியை 1-1 என்று சமன்செய்த யப்பானிய வீரர்கள் மகிழ்ச்சியில் காணப்படுகின்றனர்.

## குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார் காலே டிசம்பர் வரை கிரிக்கெட் விளையாடத் தடை

இந்திய அணியில் இடம்பெற இலஞ்சம் கொடுக்க முயன்றதாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டை மகாராஸ்டிர கிரிக்கெட் வீரர் அபுஜித் காலே ஒப்புக் கொண்டுள்ளதால் அவருக்கு இவ்வாண்டு டிசம்பர் வரை கிரிக்கெட் விளையாடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மகாராஸ்டிராவைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான அபுஜித் காலே இந்திய அணியில் இடம்பெற தேர்வாளர்களுக்கு இலஞ்சம் கொடுக்க முயன்றதாக கடந்த ஆண்டு குற்றம்சாட்டப்பட்டது.

இது குறித்து விசாரணை நடத்த இந்தியக் கிரிக்கெட் வாரியம் சார்பில் மூன்று நபர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைக்குழு நியமிக்கப்பட்டது. இக குழு நடத்திய விசாரணையின் போது குற்றச் சாட்டை காலே ஒப்புக் கொண்டார். இதனைத் தொடர்ந்து கொல்கொத்தாவில் நேற்று கூடிய கிரிக்கெட் வாரியம் அபுஜித் காலேக்கு டிசம்பர் 31 ஆம் திகதி வரை முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் விளையாடத் தடைவிதித்தது.



அமெரிக்காவின் கிழக்குப் பிராந்திய கூடைப்பந்துப் போட்டியில் டெட்றொயிட் பிஸ்டன் கழகத்தின் பென் வெலஸ் ஜெர்மனியின் ஒநிலை வெற்றிகொண்டு முன்னிலை வகிக்கிறார்.

## சச்சினைப் பின்பற்றி கங்குலியும்

இந்தியக் கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி டெண்டுல்கரைப் பின்பற்றி கொல்கொத்தாவில் பாரிய உல்லாச விடுதியொன்றைத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடத்தில் அமைந்துள்ள இவ்விடுதியின் கீழ்மாடியில் கோப்பி பருகும் சைவ உணவகம் ஒன்றும் முதலாம் மாடியில் அசைவ உணவு விடுதியும் இரண்டாம் மாடியில விளையாட்டரங்கும், உச்சி மாடியில் பொழுது போக்கு விளையாட்டரங்கும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடுதி கொல்கொத்தாவில் அனைவரினதும் மனதைக்கவரும் வகையில் அமைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.




## சர்வதேச வீரராக அறிமுகமாகிய மைதானத்தில் பத்து வருடத்தின்பின் மீண்டும் றொனால்டோ



பிரேசில் மற்றும் ஆஜன்டினா அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண தெரிவுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

தென் அமெரிக்கக் கண்டத்துக்கான போட்டியாக இது அமையவுள்ளது.

இந்தப் போட்டியில் பிரேசில் அணிக்காக விளையாடவுள்ள பிரபல வீரர் றொனால்டோ தனது 16 ஆவது வயதில் சர்வதேச போட்டிகளில் தன்னை ஒரு உதைப்பந்தாட்ட வீரராக அறிமுகப்படுத்திய மைதானத்தில் இன்று விளையாடவுள்ளார்.

குறிப்பாகப் பத்து வருடத்துக்கு பின்னர் இவர் இந்த மைதானத்தில் விளையாடவுள்ளார்.

இது பற்றி றொனால்டோ தெரிவிக்கும் போது.

நானும் ஒரு சாதாரண மனிதன். சாதாரணமாகவே இருக்கின்றேன் இந்த மைதானத்தில் விளையாடுகின்ற போது கொஞ்சம் பயம் அல்லது உணர்ச்சி வசப்பட்டிருக்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

எனது முதலாவது சர்வதேச போட்டியில் கலந்து கொண்டு பத்து வருடத்துக்கு பின் இந்த மைதானத்தில் விளையாடுவது பயமாகவே இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளவுள்ள இந்திய ஹொக்கி அணி தன்ராஜ்பிள்ளை தலைமையில் அமெரிக்கா சென்றது

### பதக்கம் பெறுவதே எனது வாழ்நாள் கனவு

ஒலிம்பிக் போட்டிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள உத்தேச இந்தியா ஹொக்கி அணி பயிற்சிக்காக நேற்று அமெரிக்காவிற்கு புறப்பட்டுச்சென்றது. தன்ராஜ் பிள்ளை தலைமையிலான இந்த அணியில் 26 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர் கிறீஸ்தலைநகர் எதென்சில் வரும் ஆகஸ்ட் மாதம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்கேற்கவுள்ள இந்திய ஆடவர் ஹொக்கி அணிக்கு தற்காலிகமாக 26 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக சிறப்பாக விளையாடிவரும் இந்திய அணிக்கு கூடுதல் பலம் சேர்க்கும் வகையில்வெளிநாடுகளில்பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் படி அமெரிக்காவின் ஆஸ்ரோனாவில் நடைபெறவுள்ள 27 நாள் பயிற்சி முகாமில் பங்கேற்கஇந்தியஅணி நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றது. புறப்படும்முன்பு விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய நட்சத்திர வீரர் தன்ராஜ் பிள்ளை இப்பயிற்சி முகாம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

பயிற்சி முகாமில் உடல் தகுதித் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க பயிற்சியைத் தொடர்ந்து ஜேர்மன்,நெதர்லாந்து நாடுகளிலும் பயிற்சி முகாம்களில் பங்கேற்கவுள்ள இந்திய அணி அங்கு நான்கு நாடுகள் போட்டியிலும் பங்கேற்கிறது என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்; நான்காவது முறையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கும் எனது கனவு கடவுளின்அருளால் நிறைவேறியுள்ளதெனவும் நட்சத்திர ஹொக்கி வீரர் தன்ராஜ் பிள்ளை தெரிவித்தார்.



மார்ச் மாதம் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிப்போட்டி உட்பட மூன்று நான்கு நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் தன்ராஜ் பிள்ளைக்கு வாய்ப்பு வழங்கப்படாத நிலையில் நாலாவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் அவரது நீண்ட கால ஆசை நிறைவேறுமா எனும் ஏக்கம் அவருக்கு மட்டுமல்லாது இரசிகர்களுக்கும் இருந்து வந்தது.

இதற்கிடையில் ஒலிம்பிக் போட்டிக்காக அறிவிக்கப்பட்ட பயிற்சி அணியிலும்அவர் இடம்பெறாததால் இரசிகர்கள் வெகுண்டெழுந்ததைத் தொடர்ந்து தன்ராஜ்பிள்ளையை இணைப்பதென ஹொக்கி சம்மேளனம் முடிவெடுத்தது.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள 26 பேர் கொண்ட பயிற்சிக் குழுவில் இடம்பெற்றுள்ள அவர், புறப்படுவதற்கு முன் தெரிவிக்கும் போது எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்று நாட்டுக்கு பதக்கம் பெற்றுத்தர வேண்டும் என்பது வாழ்நாள் கனவு அதற்கு கடவுள் வாய்ப்புக் கொடுத்துள்ளார். உலகில் உள்ள எந்த அணியையும் வெல்லும் திறமை படைத்தஅணியாக இந்தியஅணி உள்ளது எனத் தெரிவித்தார்.

-பொன்.விநாயகமூர்த்தி ஞாபகார்த்த கால்பந்துப் போட்டி-

## இறுதிப்போட்டிக்கு உழவர் ஒன்றியம், உருத்திரபுர அணிகள் மூன்றாம் இடத்துக்கான போட்டி இன்று மாலை

நாட்டுப்பற்றாளர் பொன். விநாயக மூர்த்தி நினைவாக கிளிநொச்சி உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் பங்குபற்ற உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணி தெரிவாகியுள்ளது.

நேற்று பிற்பகல் 4-30மணியளவில் கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் சந்திரோதயா அணியுடன் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியின் முற்பகுதியில் உழவர் ஒன்றிய அணி வீரர் தில்லைராஜ் கோல் போட்டு தமது அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார்.

இப்போட்டிக்கு பிரதம நடுவராக வே.சிவனேசனும் பக்க நடுவர் களாக ப. ஆனந்தராசா, த.ஜெயக்குமார் ஆகியோரும் கடமையாற்றினா.

இன்று மூன்றாவது இடத்துக்கான போட்டி வட்டக்கச்சி லக்கி ஸ்ரார்- சந்திரோதயா அணிகளுக்கிடையே நடைபெறும் இறுதிப் போட்டியில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணிகள் மோதவுள்ளன. (மி)



### வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி மன்னாரில்

வடகிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் மாவட்ட அணிகளுக்கிடையிலான வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 26,27,28 ஆம் திகதிகளில் மன்னாரில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் மன்னார் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)



## சிந்தனைக்கு

உழைப்பவனே பொருளுலகைப் படைக்கிறான்; மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 03-06-2004

## அரசின் குறி

"புதிய அரசாங்கம் சமாதான முயற்சிகளில் ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து வருகின்றது. முக்கியமாக சர்வதேச சமூகத்தின் நன்கொடைகளை உதவிகளைப் பெறுவதில் கரிசனை காட்டுகின்ற அதேவேளை சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதில் காலதாமதத்தை ஏற்படுத்தி வருகின்றது" என்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனின் கூற்றுக்கள் நடைமுறை யதார்த்தத்தின் பிரதிபலிப்புக்களே.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அக்கறையற்றுள்ளது. அன்றி இயலாதுள்ளது என்பது வெளிப்படையானது. ஆனால் அது அக்கறையற்றது போன்று இருப்பினும் சரி, இயலாத நிலையில் இருப்பினும் சரி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமைக்கு ஆட்சியிலுள்ள ஐ.ம.சு முன்னணியே பதில் அளித்தல் வேண்டும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் ஆனது கொள்கை வேறுபாடுகளைக்கொண்ட கட்சிகளின் கூட்டாகும். இதில் முக்கிய பங்காளிகளாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, ஜே.வி.பி.யும் சரி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கவிழ்த்தல் அன்றி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்ற அடிப்படையில் மட்டுமே கூட்டுச்சேர்ந்தவையாகும்.

இதற்கப்பால் இருதரப்பிற்கிடையேயும் பல்வேறு கருத்து வேறுபாடுகள், கொள்கை முரண்பாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயத்தில் இருந்து. பொருளாதாரக் கொள்கை வரை இக்கருத்து வேறுபாடுகள் அவர்களிடம் உண்டு. ஆனால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதில் இவர்களிடம் காணப்பட்ட கருத்தொற்றுமைபோல் உதவி வழங்கும் சர்வதேச நாடுகள், அமைப்புக்கள் என்பனவற்றில் நிதி உதவிகள் பெற்றுக்கொள்வதிலும் ஆர்வம் உண்டு. ஜே.வி.பி கொள்கை அடிப்படையில் இவ்விடயத்திற்கு ஆதரவு தெரிவிக்க முடியாத நிலையில் இருப்பினும், இவ்உதவியைப் பெற்றுக்கொள்வதில் அது ஆர்வமாகவே இருந்து வருகின்றது.

அவ்வாறு ஜே.வி.பி இல்லாது விட்டால் சர்வதேச சமூகத்தினர் நிதி உதவிகளையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் இணைத்துப் பேசும்போது ஜே.வி.பி மௌனம் காப்பது ஏன்? சர்வதேச மத்தியஸ்துவத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதை கடுமையாக விமர்சிக்கும் ஜே.வி.பி உதவி வழங்குவோர் நிபந்தனைகள் விதிக்கும் போது மௌனம் காப்பது ஏன்?

அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, ஜே.வி.பி.யும் சரி சர்வதேச நாடுகள், அமைப்புக்கள்என்பனவற்றிடம் இருந்து நிதி உதவியைப்பெற்றுக்கொள்வதில் எந்தக்கருத்து வேறுபாட்டையும் கொண்டதாக இருக்கவில்லை. அவ்வாறு கொண்டிருப்பினும் கூட அதனை வலியுறுத்தக் கூடிய நிலையில் அவை இன்று இல்லை.

அத்தோடு சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுவார்த்தை தொடரும் பட்சத்திலேயே நிதிஉதவி வழங்கப்படும் என உறுதிபடக்கூறி வருவதன் காரணமாகவே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக ஒரு எல்லைக்கு அப்பால், ஜே.வி.பி.யும் கூக்குரல் இடாமல் உள்ளது. அதாவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிராக கூக்குரல் இடப்படுமானால் உதவிகள் கிட்டுவது பாதிக்கப்படும் என்பதினாலேயே. ஜே.வி.பி சற்றேனும் அடக்கி வாசிக்கின்றதெனலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசு ஜே.வி.பி.யின் எதிர்ப்பு என்பதை வெளிப்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் காலதாமதம் செய்யவே முற்பட்டு நிற்கின்றது. இதே சமயம் சர்வதேச நாடுகளில் இருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதில் அது தீவிர அக்கறை கொண்டுள்ளது.

இதனைச் சர்வதேச சமூகமும் உதவிவழங்குவோரும் நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதாவது அரசாங்[illegible] சமாதான முயற்சிகளில் இரட்டைவேடம் போட முற்படுகிறது. [illegible]னத்திற்கு எதிரானவர்களின் கரத்தைப் பயன்படு[illegible] நிற்கின்றது என்பதையே ஆகும்.

இன்று அமைதிச் சூழ்நிலை ஓரளவேனும் காக்கப்படுவதற்கு யுத்த நிறுத்த உடன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் மதிக்கப்படுவது காரணமாகும். ஆனால் இது சமாதான தீர்வை மனதிற் கொண்டதாக எமக்குத் தெரியவில்லை. இது சர்வதேச நாடுகளிடம் இருந்து நிதியைப்பெற்றுக்கொள்ளும் நோக்கத்தின் பாற்பட்டதே. ஆகையினால் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்காது யுத்த நிறுத்தம் மட்டும் தொடர்வதனால் தமிழ் மக்களுக்கு சமாதானமோ, தீர்வோ கிட்டிவிடப்போவதில்லை.

# நாட்டுப்பற்றாளர் நடேசன் படுகொலைக்கு பல்வேறு அமைப்புக்கள் கண்டனம்

மூத்த பத்திரிகையாளர் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களது படுகொலைச் சம்பவத்திற்கு பல்வேறு அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளதுடன் அவரது பணிக்கு புகழாரமும் சூட்டியுள்ளன.

தென்தமிழீழத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர், ஜிநடேசனின் கொலைக்குக் கிளிநொச்சி பத்திரிகையாளர், வாசகர், நலன்புரிச் சங்கம் தமது கண்டனத்தையும், கவலையையும் வெளியிட்டுள்ளன. இது தொடர்பாக கிளிநொச்சி பத்திரிகையாளர், வாசகர் நலன்புரிச்சங்கத்தின் தலைவரான டாக்டர். கே.வி.கே. திருலோகமூர்த்தி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், நாட்டுப்பற்றாளரும், மூத்த பத்திரிகையாளருமான நடேசன் அவர்களின் மறைவு தமிழ்த்தேசியத்திற்கும், தமிழ் பத்திரிகை உலகிற்கும், ஊடகத்துறைக்கும் ஒரு பேரிழப்பாக கருதுகின்றோம்.

நாட்டுப்பற்றாளர் நடேசன் அவர்கள் வன்னி ஊடகவியலாளர்களுடன் நட்புறவுடன் பழகிவந்தவர் என்றும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட பத்திரிகையாளர் சங்கம் ஊடகவியலாளர் ஜிநடேசனின் படுகொலை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் வன்முறைச்சம்பவங்கள் போர்ச்சூழலில் நிலவியதோர் நிச்சயமற்ற தன்மையையே தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கருத்துப் பேதங்கள் இருக்கலாம். அவற்றை வலியுறுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும் வன்முறைப் போக்கை கையாள்வது புத்திசாலித்தனம் அல்ல. இதற்காக சமூகத்தை வழி நடத்துபவர்களை கொன்றொழிப்பது மோசமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் குமாரவேலு தம்பையா கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னர் தற்போது மூத்த பத்திரிகையாளர் ஜி. நடேசன் கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலையை வன்னி செய்தியாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மட்டக்களப்புப் பகுதியில் சீர் குலைந்துள்ள சட்ட ஒழுங்கைச் சீர்செய்து பொதுமக்களினதும் புத்திஜீவிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை விடுத்துள்ள அறிக்கையில் தமிழ் மக்கள் மீதும், தமிழ்த் தேசியத்தின் மீதும் தளராத பற்றுறுதி வைத்திருந்த பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசன் அவர்களது படுகொலைச் சம்பவம் ஈழத்தமிழ் மக்களின் மனங்களைப் பெரிதும் திசை திருப்பி விட்டது. தமிழ்த் தேசியத்தின் மீது வைத்திருந்த தளராத மனவுறுதியினால் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அமரர். ஜி. நடேசன் அவர்களுக்கு "நாட்டுப்பற்றாளர்" என்ற நிலையினை கௌரவமாக வழங்கியுள்ளது. நாட்டுப்பற்றாளர் அவர்களின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33,21)

# ஒற்றுமையுடன் இணைந்து செயற்பட சு.க. அமைப்பாளர்களுக்கு சந்திரிகா அறிவுறுத்து

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஜே.வி.பியுடன் இணைந்து செயல்பட வேண்டியிருப்பதால் சிறிலங்கா சுதந்திரகட்சி அமைப்பாளர்கள் அனைவரும் தம்முள் ஒற்றுமையாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென சனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜே.வி.பியினர் மாகாணசபைத் தேர்தலில் விருப்பு வாக்குகளை தங்களது கட்சிக்கு வழங்கவேண்டும் என பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருகின்றமையினால் சுதந்திரக் கட்சி வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகள் வெகுகுறைவாகவே கிடைக்கும் என சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் சனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளதையடுத்தே அவர் இவ்வாறு கூறினார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஐக்கியதேசிய முன்னணியினர் நடத்தியதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அந்த சிக்கல்களுக்கு தகுந்த பரிகாரம் கண்டு சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லப் போவதாகவும் சனாதிபதி அறிவித்துள்ளார்.

# குறைந்த விலையில் மா இறக்குமதி செய்ய முன்வரும் இறக்குமதியாளர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்

## -வர்த்தக வாணிப அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

குறைந்த விலையில் மா இறக்குமதி செய்வதற்கு முன்வரும் இறக்குமதியாளர்களுக்கு பிறிமா நிறுவனத்திற்கு வழங்கிய சகல சலுகைகளும் வழங்கப்படும் என வர்த்தக வாணிப அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார். மா இறக்குமதி செய்வதற்கான அநேக விண்ணப்பங்கள் அமைச்சுக்கு கிடைத்துள்ளதென அமைச்சர் தெரிவித்துள்ளார். வெகு விரைவில் இதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனவும், மாவின் விலையில் எந்த மாற்றங்களும் செய்ய அனுமதிக்க மாட்டோம் எனவும் அமைச்சர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

## வீதிவிபத்தில் இருவர் படுகாயம்

நேற்று மாலை 6.00 மணியளவில் கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில் கார் ஒன்று உந்துருளியை மோதியதில் இருவர் படுகாயமுற்று கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன் போது உந்துருளியில் பயணித்த சதாசிவம்-செல்வநாதன் (வயது 59) என்பவரும் அவருடைய நண்பர் ஒருவரும் காயமுற்றுள்ளனர். மேலதிக விசாரணையினை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# மாகாண சபைத் தேர்தலின்பின் மாவின் விலை அதிகரிக்கும்

## முன்னாள் நிதியமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல்களுக்கு பின் நிச்சயமாக மாவின் விலையும் ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் என முன்னாள் பிரதி நிதிஅமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். தற்பொழுது உலகச் சந்தையில் மாவின் விலை அதிகரித்துள்ளது. மக்களை ஏமாற்றி மாகாண சபைத் தேர்தலில் வெற்றி கொள்வதற்கு தற்போதைய அரசு சகல முயற்சிகளையும் செய்து கொண்டு வருகிறது எனவும் மக்கள் ஏமாற்றம் அடையவேண்டாம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கு [illegible]க் காலம் 75 வயது வரை நீடிப்பு

[illegible] அதிகாரிகளின் [illegible]த 75 வயதுவரை [illegible] அரசாங்கம் தீர்மானித்[illegible]

இதுவரை இ[illegible] சேவைக் காலம் 70 வயதா[illegible]ரையறுக்கப்பட்டிருந்தமை கு[illegible]டத்தக்கது.

அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கம் நேற்று முன்தினம் நீதி,நீதி மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரட்ணவை சந்தித்தவேளை இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கட்டணங்களைப் பெறுவதற்கு ஏற்கப்பட்டிருந்த சிக்கல்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன் திடீர் மரண விசாரணை என்ற பதவிப் பெயருக்குப் பதிலாக திடீர் மரண நீதவான் என்ற பதத்தை பிரயோகிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தியுள்ளனர். தற்போது மரண விசாரணை ஒன்றிக்கு செலுத்தப்படுகின்ற 300 ரூபா கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.



நாட்டுப்பற்றாள... ...வர்களின் வித்துடலைத் தாங்கிய ஊர்திக்கு முன்னால் மு... ...ற அணிநடையையும், யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற ... ... சாவகச்சேரி, யாழ்.நகரப்பகுதிகள் வெறிச்சோடியிருப்பதையு... ...ணலாம்.

# இந்திய-... .பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியா புதிய பரிந்துரைகள் கையளிப்பு

இந்திய- சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இந்திய அரசாங்கம் புதிய பரிந்துரைகள் சிலவற்றை இந்தியாவிடம் கையளித்திருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது.

ஏற்கனவே உத்தேசிக்கப்பட்ட படி பாதுகாப்பு ஒப்பந்தத்தை விரைவில் செய்து கொள்ள சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விரும்புகின்ற போது அதில் இடம் பெறும் சரத்துக்கள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்மானிக்கப்பட்ட பின்பே இவ்வொப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான திகதி தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின தகவல்கள் கூறுகின்றன. (32)

## வை.கோ அமெரிக்கா செல்ல உயர் நீதிமன்றம் அனுமதி

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோவை அமெரிக்காவிற்குச் செல்வதற்குச் சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இவர் பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணைமனுவில் வெளியே வந்துள்ளமை தெரிந்ததே. தனது மகளின் பிள்ளையை அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக அமெரிக்காவிற்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் அதற்கு அனுமதி அளிக்குமாறும் அவர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து நீதிமன்றம் அவர் மூன்று வாரத்திற்குள் தனது பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியாவிற்கு வரவேண்டுமென கூறியுள்ளது.

### அணையில்..

நடக்காமல் பார்த்துக்கொள்வது தனது பொறுப்பு என புதிய சிறிலங்கா கட்டளைத் தளபதி சாந்த கொட்டேகொட உறுதியளித்தார்.

குற்றவாளிகளை இனங் காணுவதற்கு இருதரப்பினரும் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர்.

காலை 10.30க்கு ஆரம்பமாகி இருமணிநேரங்கள் இடம்பெற்ற இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் , சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தளபதிகளான ரமணன்,ஜெயார்த்தன் மற்றும் சமாதான செயலகத்தை சேர்ந்த பவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். கண் காணிப்புக் குழு பிரதித்தலைவர் ஹொக்லண்ட் இச்சந்திப்பில் இடம்பெற்றிருந்தார்.

### நடேசனின்..

இந்நிகழ்வுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள், ஊடக வியலாளர்கள், போராளிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொள்வர். (33)

### புதிய..

சரத் பொன்சேகாவைத் தளபதியாக நியமிக்கும் படி சனாதிபதிக்குச் சில அழுத்தங்கள் போடப்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால் சாந்த கொட்டேகொடவை நியமமிக்கவே சனாதிபதி சந்திரிகா விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## வட்டக்கச்சியில் குளத்தில் மூழ்கி சிறுமி ஒருவர் பரிதாப மரணம்

வட்டக்கச்சி பெரியகுளம் பகுதியில் நேற்று சிறுமி ஒருவர் குளத்தில் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார்.

புளியம் பொக்கனை நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த தியாகராசா லக்ஷிகா (வயது-11) என்பவரே உயிரிழந்தவராவார்.

குடும்பத்தாருடன் குளத்திற்கு நீராடச் சென்ற மேற்படி சிறுமி நீரில் மூழ்கியதாகவும் பின் காணாமல் போனதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனை அடுத்து அயலவர்களின் உதவியுடன் சிறுமியை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவரது உயிரை காப்பாற்ற முடியவில்லை. (12)

## சிறில.இராணுவப் பேச்சாளர் மீது காணி தொடர்பாக குற்றச்சாட்டு

இலங்கையின் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா நிலம் ஒன்று தொடர்பில் சட்ட விரோத ஆவணங்களை தயாரித்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார். கொழும்பின் சுற்றுப்புறமான இராஜகிரியவில் உள்ள அகழ்வாராய்ச்சி திணைக்களத்துக்குச் சொந்தமான நிலத்தையே அவர் சட்டவிரோத ஆவணங்களைத் தயாரித்து தமது சொந்தமாக்கிக் கொள்ள முனைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் கொழும்பின் இரண்டு சட்டத்தரணிகளும் சம்பந்தபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் இராணுவத் தரப்பை வினவியபோது கேணல் சுமேத பெரேரா இந்த விடயத்தில் சம்பந்தபட்டுள்ளமை சம்பந்தமாக உறுதியான தகவல் எவையும் வெளியாகவில்லை. அவ்வாறு அவர் மீது குற்றம் நேரடியாக சுமத்தப்படுமானால் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### கிளி,யாழ்.இல்...

நேற்று பூரண துக்க தினம் கடைப் பிடிக்கப்பட்டது. மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் இப்படுகொலையைக் கண்டித்து இடம்பெற்ற ஹர்த்தாலை முன்னிட்டு கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சிங்கள,தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் இக் கொலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

வவுனியாவில் நேற்று வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு துக்க தினம் அனுஷ்டிக்கப் பட்டது. வன்னிப் பகுதியில் நேற்று வியாபார நிலையங்கள், சந்தைகள் மூடப்பட்டு துக்கதினம் கடைப் பிடிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். குடாநாட்டிலும் நேற்று பூரண துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. வர்த்தக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் என்பன மூடப்பட்டன. வாகனப் போக்குவரத்தும் இடம் பெறவில்லை அத்துடன் முக்கிய இடங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

அத்துடன் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனின் வித்துடல் எடுத்துச் செல்லப்பட்ட இடங்களில்லாம் பெருமளவு மக்கள் கூடி மலரஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சியில் காலை 10.00 மணிக்கு விடுதலைப்புலிகளின் ஊடகஇணைப்புச் செயலகத்திலிருந்து அமரர் ஜி.நடேசன் அவர்களின் வித்துடல் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்... வாகனத்தில் எடுத்துவரப்... ...ாச்சி கலாசார புலிகளி... ...ளர். அஞ்ச... பொது... அதி... ...வைச் ...ரிகை ஜி.ந... தமி... பொது... அவர்களும் ஏற்றிவைத்ததுடன், வித்துடலுக்கான மலர் மாலையினை அணிவித்தனர்.

தொடர்ந்து ஊடகவியலாளர்கள், கல் விமான்கள் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள், உறுப்பினர்கள் வித்துடலிற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

தலைமை இரங்கலுரையினை அடுத்து ஈழநாதம் மக்கள் தினசரி பிரதம ஆசிரியர் பொ.ஜெயராஜ், கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம். இலங்கைத்தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தலைவர் இரா.துரைரத்தினம் கிளி. வெகுசன அமைப்புக்கள் ஒன்றிய சார்பில் க.பசுபதிப்பிள்ளை, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் வெ.பாலகுமாரன், மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ.சந்திரசேகரன், கிளிநொச்சி வர்த்தக சங்கச்செயலாளர் நவரட்ணராஜா ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர் அரசறிவியற் கல்லூரிப் போராளி இரங்கற்பா வழங்கினார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் அமரர் ஜி.நடேசன் அவர்களின் பூதவுடலிற்கு மலரஞ்சலியினைச் செலுத்தினர்.

அடுத்து பகல் 12.15 மணிக்கு, அன்னாரின் பூதவுடல் அலங்கரிக்கப்பெற்ற ஊர்தியில் பாண்ட் வாத்திய இசைமுன்செல்ல அதனைத் தொடர்ந்து பூதவுடல் தாங்கிய பேழை இராணுவ மரியாதையுடன் பிரதான வீதிவழியாக கிளி.கந்தசுவாமி ஆலய முன்றலை வந்தடைந்து அங்கிருந்து பிரதான வீதி வழியாக யாழ். எடுத்துச்செல்லப் பட்டது.

யாழ்குடாநாட்டில் நேற்று பி.ப.2.15 மணியளவில் முகமாலை இராணுவ சோதனை. உள்வரவு வாசலில் ...ரின். ஏற்பாட்டுக்குழுத் தலை ...பிறையன். ஜி.நடேசன் வித்துடலை தமிழீழ ...றைத் துணைப்பொறுப் ...ா.தங்கன் அவர்களிட ...கயேற்றார்.

...டர்ந்து யாழ்.மாவட்ட ...றைப் பொறுப்பாளர் ...ரிதி அவரது வித்து ...லர்மாலை அணிவித்து ...சலுத்தினார்.

மக்கள் நலன்புரிச்சங்கத்தின் பாண்ட்வாத்திய இசை அணிவகுப்பு மரியாதையுடன் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரன், சிவநேசன், ரவிராஜ், சுரேஷ்பிரேமச்சந்திரன், திருமதி. பத்மினி சிதம்பரநாதன், ஈழவேந்தன் ஆகியோரும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் ஆகியோருடன் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் சோதனைச்சாவடி வீதியூடாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கொடிகாமம் பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்ட நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுத் தலைவர் மா.இளம்பிறையன் தலைமையில் இடம்பெற்றது. ஈகச்சுடரினை கொடிகாமம் வணிகர் மன்றத் தலைவர் சின்னத்தம்பி ஏற்றிவைக்க, மலர்மாலையைக் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் கந்தையா அணிவித்தார். நினைவுரைகளை பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பகீரதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சாவகச்சேரி நவீன சந்தை முன்றலில் இடம்பெற்ற நினைவஞ்சலிக் கூட்டம் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் அருளானந்தம் தலைமையில் இடம்பெற்றது. ஈகச்சுடரினை நடேசன் அவர்களது பாரியாரும், சகோதரி திருமதி பத்மநாயகியும் ஏற்றிவைத்தனர். நினைவுரைகளை பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி உப அதிபர் அ... பாலன், க... துறைப் ... ஆகி... கை... அஞ்சல... ப.நோ... உபதலை... வகித்தா... எழுச்சிப... இராசரூப...

மலர்மாலையை கைதடி வணிகர் மன்ற செயலாளர் புஷ்பராசா, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பொதுச் செயலர் கனகலிங்கம் ஆகியோர் அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி உரையினை கைதடிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைப் பிரதிநிதி தங்கராசா நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஊர்வலமாக ஜி.நடேசன் அவர்களது வித்துடல் ஏ-9 சாலை வழியாக எடுத்துவரப்பட்டு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து பரமேஸ்வராச் சந்தி மற்றும் திருநெல்வேலிச்சந்தி, உரும்பிராய், கோப்பாய், அச்சுவேலிப்பகுதிகளூடாக எடுத்துச் செல்லப் பட்ட பூதவுடல் நேற்றிரவு குடும்பத்தவர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (33,27,21,சோ.ச,28)

## சாவு அறிவித்தல்



### திரு. கந்தன் சின்னத்துரை

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 321 பாண்டியன் குளம் நட்டாங்கண்டலை வசிப்பிடமாகவும், தற்பொழுது 154ஆம் கட்டை செல்வபுரம் கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான கந்தன் சின்னத்துரை 02.06.2004 புதன்கிழமை அன்று காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் (கொலண்ட்), மனோரஞ்சிதம், காலம்சென்ற கலாரஞ்சிதம், பாஸ்கரன் (பிரான்ஸ்), சிறீதரன், யோகரஞ்சிதம், றீரஞ்சன் (கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும், ஜெனோ வசுபூலியற் (கொலண்ட்), ஞானசேகரம் (மின்இணைப்பாளர்) சிறீ கலாரஞ்சினி (பிரான்ஸ்) சுபாஜினி இரவிச்சந்திரன், றாஜினி (கொலண்ட்) ஆகியோரின் மாமனாரும்,

அஸ்வின் ...த்தன், ...நண், சிந்துஜா, லெஸ்லின், சஞ்சீவன். அ... , கோபி..., பபிதன், கயல்விழி, மதுஷன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

...டல் 03.06.2004 வியாழன் இன்று பி.ப.4.00 ...ட்டை செல்வபுரம் கிளிநொச்சியில் அவரது ...ந்து எடுத்துச் செல்லப்பட்டு செல்வபுரம் ...தில் தகனம் செய்யப்படும். இவ்வறி...ர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ...மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
சி.சிறிதரன் (மகன்)

...ாச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.